R.R. 29-1-70

*Issued* 27—10—1965]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## MONDAY, 2ND AUGUST 1965

**VOLUME XXX—No. 6**

223

*CONTENTS*


| | | PAGES |
|---|---|---|
| I | Questions and Answers .. .. .. .. .. .. | 527–546 |
| II | Adjournment Motions— | |
| | (1) Promulgation of Prohibitory order .. .. .. .. | 546–553 |
| | (2) Delay in the despatch of S.S.L.C. Books .. .. .. | 553–555 |
| III | Government Bills— | |
| | (1) The Madras District Development Councils (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 15 of 1965) .. .. .. .. | 555–563 |
| | (2) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 16 of 1965) .. .. .. .. | 563–573 |
| IV | Announcement— | |
| | The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965 .. .. .. .. .. .. .. | 563 |
| V | Papers laid on the Table of the House .. .. .. .. | 573 |


11, 31 N65
N65.30.6
64914

©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

PRICE 50 *Paise*]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, the 2nd August 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at nine of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Outbreak of Plague at Vellore*

* 50 *Q*.—SRI S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons affected by the outbreak of plague recently in Vellore ;

(*b*) the steps taken to arrest the spread of the same ; and

(*c*) the number of persons died on account of the same?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஒன்று.

(இ) பிளேக் தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, உடனுக்குடன் தேவையான பிளேக் தடுப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. தண்ணீரில் கரையக் கூடிய B H C 50 பர் செண்ட் பவுடர் வீடுகளில் தெளிக்கப்பட்டது. சயாநோகாஸ் 'A' டஸ்டைக் கொண்டு எலி வளைகளிலும் பிற எலிப்பொந்து களிலும் புகையூட்டப்பட்டது. மேலும் B H C 15 பர்சென்ட் பவுடரும் உபயோகிக்கப்பட்டது. நோயைத் தடுப்பதற்காக பொதுமக்களுக்கு பிளேக் தடுப்பு ஊசி போடப்பட்டது. இவ்வேலைக்குத் தேவையான கூடுதல் ஊழியர்கள் அமர்த்தப் பட்டார்கள்.

* (உ) ஒருவருமில்லை.

**திரு. கோ. பாலகிருஷ்ணன் :** வேலூரில் பரவிய பிளேக் வியாதி வேலூரில் மட்டும் நின்று விட்டதா அல்லது வேறு எங் கிலும் பரவி இருக்கிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு [illegible] இருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வேலூரில் மாத்திரம் தான் வந்ததாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருக்கிறது. பிறகு வட ஆற்காட்டில் உள்ள ஆரணியில் வந்ததாகத் தகவல் கிடைத்து பிறகு அது பிளேக் அல்ல என்று கூறப்பட்டது.

*Absorption of Former District Board Employees in State Government*

* 51 *Q*.—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the employees in the Health branch of the former District Boards have been absorbed in service under the State Government; and

[2nd August 1965

(*b*) if so, whether they are allowed future annual increments?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம்.

(இ) விதிகளுக்கிணங்க அவர்களுக்கு சம்பள உயர்வு அனுமதிக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** முன்னாள் மாவட்டக்கழகத்தில் பணியாற்றிய பலரை நிரந்தரமாக ஆக்கியும், மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றுவதற்கான வாய்ப்புகளை கொடுத்த அதே நேரத்தில் அதே பிரிவில் வேலை செய்கின்ற சுகாதாரப்பிரிவு பணியாளர்கள் நாளது வரையில் நிரந்தரமாக்கப்படவில்லை. சம்பள உயர்வும் கொடுக்கப்படவில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் மாற்றுவதற்கான வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I shall answer this question in English. Their scales of pay have since been revised and increments have been given. They have also been provincialised.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கடந்த பத்து ஆண்டுகாலமாக அந்த ஒரு பிரிவுக்கு மட்டும் வசதிகள் கொடுக்காததற்கு காரணம் என்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த டிஸ்டிரிக்ட் போர்டு, பஞ்சாயத்து ஆக்ட் வந்தபிறகு நீலகிரி ஜில்லாவில், பஞ்சாயத்து ஊழியர்கள் 106 பேர், அவர்கள் எல்லோரும் அப்போதே அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஆனால் அவர்கள் முதலில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எல்லோரும் பர்மனன்ட் செய்யப்பட்டு விட்டார்கள்.

**திரு. சா. கணேசன் :** இந்தத் தமிழக மாநிலத்தில் முன்னாள் ஜில்லா போர்டு அல்லது மாவட்ட வாரியங்களில் வேலைபார்த்து இப்பொழுது அரசாங்க ஊழியர்களாக ஆகியிருப்பவர்களுடைய தொகை மொத்தம் எவ்வளவு இருக்கும், அவர்களுடைய சம்பளம் எவ்வளவு ஆகும் என்று கனம் அமைச்சரவர்கள் தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

### *Blood Donors*

*52 *Q*.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of persons (males and females) who donated blood in the blood-banks in the State during the period April to September 1964; and

(*b*) the number among them who donated freely?



2nd August 1965]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :**

(உ) ஒருவருமில்லை.

பெண்கள்—19

(இ) 621.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, இந்த ரத்த தானம் மூலம் சேமிக்கப்பட்ட ரத்தம் அவ்வளவும் நம் மாநிலத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டதா, அல்லது போர் முனைக்கு அனுப்பப்பட்டதா ? போர்முனைக்கு அனுப்பப்பட்டிருந்தால் அதன் விவரம் என்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நம்முடைய மாநிலத்தில் தான் அது உபயோகப்படுகின்றது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மருத்துவ மனைகளில் உள்ள வியாதியஸ்தர்களுக்கு ரத்தம் கொடுக்கப்பட்டதா ? அப்படியானால் அதற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரத்தம் கொடுக்கப்பட வேண்டிய வியாதியஸ்தர்களுக்கு ரத்தம் கொடுக்கப்படுகிறது. அதற்காக எல்லோரும் கட்டணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய வருவாய்க்குத் தகுந்தாற்போல கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, இப்போது கிடைக்கப்பெறுகின்றது போதுமான அளவிற்கு இருக்கின்றதா அல்லது பற்றாக்குறையாக இருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பற்றாக்குறையாக இல்லை. பற்றாக்குறை இல்லாமல் இருப்பதற்காகத்தான் 'ஃப்ரீஸ் டிரை பிளான்ட்.' என்ற நிறுவனம் கிண்டியில் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது.

**திரு. முனு ஆதி :** ரத்ததானம் கொடுப்பவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படுகின்ற தொகையை உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் அமைச்சரவர்கள் பதிலில் இருந்து ரத்ததானம் வழங்கியவர்களில் 12,000 ஆண்கள் என்றும், பெண்கள் 19 பேர்கள் தான் என்றும் தெரியவருகிறது. பெண்கள் ரத்ததானம் கொடுக்க முன் வாராததற்கு அவர்களுடைய ரத்தம் இன்பீரியர் ஆக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நம்முடைய நாட்டிலே ஸ்டாட்டிஸ்டிக்ஸ் பிரகாரம் பார்ப்போமானால், அதிகப்படியாக பெண்கள் அனீமியாவினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களிடம் இருந்து ரத்தம் எடுக்க சாத்தியம் இல்லை.

[2nd August 1965

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** ரத்ததானம் கொடுக்கிறவர்களுக்கு சில மாவட்ட ஆஸ்பத்திரிகளிலே அதிகப்படியான தொகையும் சில ஆஸ்பத்திரிகளிலே குறைவான தொகையும் கொடுக்கப்படுகிறது. இதைச் சமமாக எல்லா இடங்களிலும் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அம்மாதிரியான தகவல் அரசாங்கத்திடம் இல்லை. ரத்ததானம் கொடுப்பவர்களுக்கு ஏழு ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஒரு ரூபாய் அவர்களுக்கு டயட்டுக்காக கொடுக்கப்படுகிறது.

**திரு. வை. சங்கரன் :** ஒரு சில பெரிய ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்சரி போன்ற இடங்களில் பெரிய தனியார் டாக்டர்கள் சர்க்காருடைய விலையை விட ரத்தத்தை அதிக விலை கொடுத்து வாங்குவதினால், ஓரளவுக்கு சர்க்காருக்கு ரத்தம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமானால், சர்க்கார் விலையை ஓர் அளவுக்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து தான் இரத்த தானம் கொடுப்பவர்களுக்கு இப்பொழுது கொடுக்கக்கூடிய ரூபாய் 7 என்பதை இன்னும் கொஞ்சம் உயர்த்துவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** பணத்திற்கு ஆசைப்பட்டு பல ஏழைகளும் இரத்த தானம் கொடுக்க முன்வந்து, அதன் காரணமாக அவர்கள் சோர்வுற்று அவர்கள் உடலில் திரும்ப இரத்தத்தை ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இரத்த தானம் அளித்தவர்களுக்கு இரத்த சோகை எற்பட்டால், அவர்களுக்கும் இரத்தம் அளிக்கப்பட்டு வருகிறது.

### விடுதலையான கைதிகளுக்கு உதவியளிக்கும் சங்கம்

*** 53 கேள்வி—திரு. து. ப அழகமுத்து :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விடுதலையான கைதிகளுக்கு உதவியளிக்கும் சங்கத்திற்குரிய நிர்வாகத்தினர் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர் ?

(இ) அந்த சங்கத்தின் மூலம் வசூலாகும் பணம் எவ்வகையில் விநியோகிக்கப்படுகிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) விடுதலையான கைதிகளுக்கு உதவியளிக்கும் தமிழ்நாட்டிலுள்ள சங்கம், பதிவான ஒரு சங்கமாகும். இதன் நிர்வாகத்தை மத்தியக்குழு ஒன்று கவனித்து



2 d August 1965]

கொள்கிறது. இச்சங்கத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அங்கத்தினர்களாயிருப்பவர்கள் மட்டுமே மத்தியக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், சிறைச்சாலைகள் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், போலீஸ் கமிஷனர், பிரதம மாகாண மாஜிஸ்டிரேட், சென்னை மத்திய சிறைச்சாலை சூபரின்டெண்டெண்ட் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் அங்கத்தினர்களாவார். சிறைச்சாலைகள் இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் பரிவுரையின் மேல் அரசாங்கம் ஐந்து அங்கத்தினர்களை மத்தியக் குழுவிற்கு நியமனம் செய்கிறது.

மத்தியக்குழு மாவட்டக் கிளைக் குழுக்களை நியமிக்கிறது. மத்தியக் குழுவின் மேற்பார்வையின் கீழும் ஆலோசனையின் கீழும் 11 கிளை மாவட்டக் குழுக்கள் இப்போது செயல்படுகின்றன.

(இ) மத்தியக் குழுவின் முடிவை அனுசரித்து சங்கத்தின் நிதிகள் நிர்வகிக்கப்படுகின்றன. உதவி பெறத் தகுதியுள்ள பழைய கைதிகளுக்கு ரூபாய் 25 வரையில் பண உதவி அனுமதிக்க நிலை ஆணைகளின்படி கௌரவ செயலாளருக்கு மத்தியக்குழு அதிகாரம் அளிக்கிறது. இருபத்தைந்து ரூபாய்க்கு மேல் பண உதவி அளிக்க அனுமதி வழங்குவதற்கு துணைக் குழு ஒன்று உள்ளது. சிறைச்சாலைகள் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், பிரதம மாகாண மாஜிஸ்டிரேட், போலீஸ் கமிஷனர், கௌரவ செயலாளர், கௌரவப் பொருளாளர் ஆகியோர் அத்துணைக் குழுவின் அங்கத்தினர்கள். பழைய கைதிகள் 25 ரூபாய்க்கு மேற்பட்டு பண உதவி கேட்டுச் செய்து கொள்ளும் மனுக்கள், சம்பந்தப்பட்ட புரொபேஷன் அதிகாரியின் அறிக்கையுடன் பொதுவாக இத்துணைக் குழுவின் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு மனுவும் அதன் தகுதிகளை அனுசரித்துப் பைசல் செய்யப்படுகிறது.

**திரு. சா. கணேசன் :** இந்த விடுதலையான கைதிகளுக்கு உதவி அளிக்கும் சங்கத்திலிருந்து கடைசி கணக்கில் வந்த நிலையில் எவ்வளவு தொகை வசூலாயிற்று ? அதாவது சந்தாவாகவும், நன்கொடையாகவும், அரசாங்கத்தின் மான்யமாகவும் எவ்வளவு வசூலாயிற்று ? அதில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. எம். எஸ். மணி :** இந்தச் சங்கத்திற்கு எந்தெந்த வகையில் பணம் சேருகிறது ? அதை கைதிகளுக்கு செலவழிக்கிறார்களா ? அல்லது அதிகாரிகள் அங்கிருந்து மாறுதல் செய்யப்படும்பொழுது அவர்களுக்கு, விருந்து கொடுக்க செலவழிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதிகாரிகளுக்கு செலவழிக்கப்படுகிறதாக என்னிடம் தகவல் இல்லை. அந்த சங்கத்தில் மெம்பர்களாக இருப்பவர்களிடம் ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு வருஷத்

திற்கு ரூபாய் 5, லைப் மெம்பருக்கு ரூபாய் 200, பேட்ரனுக்கு ரூ. 1,000 வீதம் வசூலிக்கிறார்கள். மற்றும் பொது மக்களிடமிருந்து பணம் அதற்கு வருகிறது. பொதுவாக அதை நிர்வகிப்பதற்காக அரசாங்கம் வருஷத்திற்கு ரூ. 6,000 கொடுக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தச் சங்கத்தில் வரவு-செலவு கணக்குகள் எப்படி தணிக்கை செய்யப்படுகிறது? தணிக்கை அறிக்கையை அரசாங்கம் பரிசீலிக்கிறார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஆடிட்டர்ஸ் தணிக்கை செய்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** விடுதலையான கைதிகள் இந்த உதவிப் பணம்பெற என்ன தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் ?

**கனம் திரு கோ. பூவராகன் :** ஜெயிலிலிருந்து விடுதலையானவர்களுக்கு இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது.

**திரு. எம். எஸ். மணி :** 1963-64-வது ஆண்டில் விடுதலையான கைதிகள் எத்தனை பேர்கள் ? எத்தனை பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** விடுதலையான கைதிகள் இந்த கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு விடை கொடுக்க முடியும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, விடுதலையாகி வருகின்ற கைதிகளுக்கு உதவி செய்கின்ற அளவோடு, இந்தச் சங்கம் தன்னுடைய பணியைச் செய்கிறதா ? அல்லது அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருகிற பணிகளை இந்தச் சங்கம் செய்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அவர்களுக்கு உதவி அளிப்பது மட்டுமல்ல. அவர்கள் முன்பு வேலையில் இருந்திருந்தால், பழைய வேலையில் அவர்களைத் திரும்பவும் அமர்த்துவதற்கும் இந்தச் சங்கம் உதவியாக இருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** ஆயுள் தண்டனை பெற்று உள்ளே இருக்கிற கைதிகள் 7, 8, ஆண்டுகளுக்கு உள்ளே இருக்கிற காரணத்தால் தாங்கள் படிக்கவேண்டுமென்று விரும்பி புஸ்தகங்கள் கேட்டால், அந்தச் சங்கத்திற்கு எழுதினால், அவர்கள் புத்தகம் வாங்கிக் கொடுக்கிறார்களா ? அப்படிக் கொடுத்திருந்தால் இந்த மாநிலத்தில் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** விடுதலையான கைதிகளைப்பற்றி கவனிப்பதற்காக இந்தச் சங்கம் இருக்கிறது. உள்ளே இருக்கிற கைதிகளைப் பொறுத்தவரையில் சிறைச்சாலை அதிகாரிகள் கவனித்துக்கொள்வார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சிறையிலே அதிக காலம் தண்டனை பெற்று 10, 15 ஆண்டுகள் தண்டனை பெற்று, பரம்பரைக் குற்றம் செய்யாமல், திடீரென்று குற்றம் செய்து 10, 15 ஆண்டு





காலம் தண்டனை பெற்று வெளியே வரும்போது அவர்கள் தங்கள் வாழ்வை செம்மையாக நடத்திக்கொண்டு செல்வதற்கு, சிறையிலே இருக்கும் பொழுது அவர்களுக்கு சிறிய வேலைகளைக் கொடுத்து, அதற்கு அவர்களுக்கு சம்பளம் கொடுத்து, கணிசமான தொகையோடு அவர்கள் வெளியே வருவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

223

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் விடுதலையான பிறகு அவர்கள் முன்பு செய்துகொண்டிருந்த வேலை அல்லது தொழிலைச் செய்வதற்கு உதவியளிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால், கள்ளச் சாராயம் காய்ச்சுவது அல்லது திருடுவது இம்மாதிரி தொழிலில் முன்பு ஈடுபட்டிருந்தால், அவர்கள் திரும்பவும் அந்தத் தொழிலைச் செய்ய அனுமதிக்கப்படுவார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அம்மாதிரி தவறு செய்கிறவர்களுக்கு திரும்பவும் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை, அவர்களை வேலையில் அமர்த்தவேண்டிய அவசியமில்லை. கனம் அங்கத்தினர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

**திரு. முனு. ஆதி :** சிறைச்சாலைகளில் உள்ள நூல்நிலைய வாசகசாலைகளுக்கு இந்தச் சங்கம் ஏதேனும் உதவி செய்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** சிறைச்சாலைகளில் உள்ள வாசகசாலைகளை சிறைச்சாலை அதிகாரிகள் கவனித்துக்கொள்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அமைச்சர் அவர்கள் முதல் கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது, விண்ணப்பத்தின் தகுதி அடிப்படையில் பரிசீலனை செய்து உதவி அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் உப கேள்வி கேட்டபொழுது ஜெயிலிலிருந்து வெளிவந்தவர்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எந்தத் தகுதி அடிப்படையில் உதவி அளிக்கப்படுகிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பொதுவாக, எல்லோருக்கும் ரூ. 25 கொடுக்கிறோம். ரூ. 25-க்கு மேல் பணம் கேட்டால் அவர்களுக்குக் கொடுக்கலாமா என்று பரிசீலனை செய்து, தகுதி பார்த்து கொடுக்கிறோம்.

**திரு. எம். எஸ். மணி :** இந்தச் சங்கத்திலிருக்கிற பணம் பெரும் பகுதி விடுதலையான கைதிகளுக்கு செலவழிக்கப்படாமல் விருந்துகளுக்கு செலவழிக்கப்படுகிறது என்று நான் குறிப்பிட்டால், அதை அமைச்சர் அவர்கள் மறுப்பார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** விருந்துகளுக்கு செலவழிக்கப்படுகிறதாக என்னிடம் தகவல் இல்லை. அவர்களுக்கு தகவல் இருந்தால், எழுதி அனுப்பினால், பரிசீலனை செய்யப்படும்.

[2nd August 1965.

*Boards for the Welfare of Prisoners in Jails*

* 54 Q.—SRI S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any boards, to look after the welfare of the prisoners undergoing imprisonment in jails, are constituted; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) அரசாங்க அதிகாரிகளையும் அரசாங்கச் சார்பற்றவர்களையும் கொண்டு ஒவ்வொரு சிறைச்சாலையிலும் பார்வையாளர் குழு ஒன்று அமைக்கப்படுகின்றது. சென்னை நகரில் போலீஸ் கமிஷனரும், வெளியூர்களில் அந்தந்த மாவட்டக் கலெக்டரும் இக் குழுவிற்கு தங்கள் அலுவலால் தலைவராவர். இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடி கைதிகளின் தேவைகளைப் பரிசீலனை செய்கின்றது.

**திரு. எம். எஸ். மணி :** அந்தக் குழுவுக்கு உறுப்பினர்கள் எந்த அடிப்படையிலே அமர்த்தப்படுகிறார்கள்? அரசாங்கம் அவர்களை நியமிக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்கு யோக்கியாதாம்சம் என்ன இருக்கவேண்டும்?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அந்தந்த மாவட்டப் பார்வையாளர்களை நியமிப்பதற்கு அங்கு இருக்கிற கலெக்டர், டெப்யூடி சூபரின்டென்டென்ட் பரிசீலனை செய்து இங்கே அனுப்புகிறார்கள். இங்கே பரிசீலனை செய்து தலைமை சிறைச்சாலை நிர்வாகி சிபார்சு செய்து அனுப்புகிறார்கள். இதைப் பார்த்து அரசாங்கம் அவர்களை நியமிக்கிறார்கள்.

**திரு. முனு. ஆதி :** இந்தக் குழுக்களில் சட்டசபை உறுப்பினர்கள் பங்கு எடுத்துக்கொள்கிறார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதுபோன்ற தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. வை. சங்கரன் :** கைதிகளின் தேவைகள் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்கள். அம்மாதிரிப் பார்த்துப் பரிசீலனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது, என்ன அதிகாரம் இருக்கிறது?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இந்தக் குழு அவ்வப்பொழுது அங்கே இருக்கும், 'குறைகள் புத்தகத்தில்' எழுதிவைக்கப்படுமானால், அவற்றை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி பரிசீலனை செய்து நிவர்த்திக்கப்படுகின்றன.

*Vigilance Institutions*

* 55 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the total number of vigilance institutions in the State and the expenditure incurred towards their maintenance and receipts from them during 1963–64?



2nd August 1965]

**கனம் திரு. கோ. பூவராகன் :** இம்மாநிலத்தில் 13 ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளன. 1963-64-ல் அவற்றின் பராமரிப்பிற்காகச் செலவான மொத்த தொகை ரூ. 2,92,060 இவ்வாண்டில் அவைகளிடமிருந்து கிடைத்த வரவினம் ரூ. 21,437.

* 56 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the number of persons (women and girls) committed to vigilance institutions during the year 1963?

**கனம் திரு. கோ. பூவராகன் :** 1963-ல் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு 123 பேர் அனுப்பப்பட்டனர்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, இந்த ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் அவர்களுக்கு என்னென்ன வேலைகள் கொடுக்கப்படுகின்றன?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அவர்களுக்கு, புத்தகம் பைண்ட் செய்தல், காய்கறி போடுதல், பின்னல் வேலை, தையல் வேலை முதலியவைகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, இத்தகைய ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் வைக்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** 1962-ம் ஆண்டைவிட 1963-ம் ஆண்டில் குறைவுதான்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் பெண்கள் நிரந்தரமாக வைக்கப் படுகிறார்களா? அல்லது அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க அரசாங்கம் முன் வருகிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அவர்கள் நல்ல முறையிலே திருந்தி வருகிறார்கள் என்று தெரிந்தால், மாப்பிள்ளைகள் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று முன்வந்தால், உண்மையில் அப்படி வருகிறவர் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவாரா என்று பரிசிலனை செய்து, திருமணம் செய்து கொள்ள அனுமதி கொடுக்கப்படுகிறது.

**திரு. ம. கமலநாதன்:** அப்படிக் குடும்ப வாழ்க்கை நடத்துகிற பெண்களின் எண்ணிக்கை என்ன என்று அறிவிக்க முடியுமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதைப்பற்றி தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், தொகுத்துக் கொடுக்கப்படும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** நல்ல முறையில் திருந்தி வருகிறவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த திருமணச் செலவை யார் செய்வது?

**கனம் திரு. கோ. பூவராகன்:** திருமணச் செலவை மாப்பிள்ளை தான் செய்வார்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** தலைவர் அவர்களே, எத்தகைய குற்றம் செய்தவர்கள், இத்தகைய ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எத்தகைய குற்றம் புரிந்தவர்கள் என்பது தெரியும். அதை நான் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை.

**திரு. வை. சங்கரன்:** சார், சாதாரணமாக திக்கற்ற அனாதியான பெண்களை இப்படிப் பட்ட ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களில் சேர்க்க இடம் இல்லை. நேரிடையாக விபசார விடுதியிலிருந்து மீட்கப்படுகிற, பெண்கள்தான் இங்கே அனுமதிக்கப்பட விதி இருக்கிறது. தாய் தந்தையற்ற, அனாதியான பெண்களையும் இங்கே சேர்க்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** இது 'விஜிலன்ஸ் ஹோம்' வேறு 'ப்ரொடெக்ஷன் ஹோம்', 'சர்வீஸ் ஹோம்' என்றெல்லாம் இருக்கின்றன. அங்கே அவர்களைச் சேர்க்கலாம். அங்கே அப்படிப் பட்டவர்களுக்கு சிறந்த பாதுகாப்பு இருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** சார், இந்த ஒழுக்கக் குறைவு காரணமாக ஏழைப் பெண்கள்தான் இப்படிப் பட்ட விடுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ஆனால் பணக்காரப் பெண்கள் அழைத்துச் செல்லப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எனக்குத் தெரிந்தவரை பணக்கார வீட்டுப் பெண்களும் அங்கே வருகிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** தலைவர் அவர்களே, சமூகத்தில், இப்படிப்பட்ட ஒழுக்கக் குறைவுகள் ஏற்படுவது ஏன் என்பதை ஆராய்ந்து, அப்படிப் பட்ட ஒழுக்கக் குறைவை அறவே ஒழிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பண்டை காலம் முதற் கொண்டே ஆயிரம் ஆண்டுகளாகவே இருந்துவரும் ஒன்று இந்த ஒழுக்கக் கேடு என்பது. ஒன்றும் புதிதாக ஏற்பட்டது அல்ல. ஆகவே, அதை ஆராய்ந்து அறிவது என்பது ரொம்பச் சிரமம்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பெண் கலியாணம் செய்து கொண்டு, வாழ்க்கை நடத்தாமல் வேண்டாம் என்று சொன்னால், அவள் ஜீவனாம்சம் கேட்டுக் கொண்டு போய்விடுகிறாள். சர்க்காரிலே ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். ஒரு பெண் கல்யாணம் செய்து கொண்டு, பிரசவம் வேண்டாம் என்று போனால், அதற்கு அமைச்சர் என்ன சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

பதில் இல்லை.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, இந்த ஒழுக்க கண்காணிப்பு இல்லங்களில் பெண்கள் எத்தனை ஆண்டுகள் வைக்கப்படுகிறார்கள்? ஒழுங்காக விதிமுறைகளை செயல்படுத்துவது யார்?



**கனம் திரு. கோ. பூவராகன்:** தண்டனைக்காலம் வரை அங்கே இருக்கிறார்கள். அது ஆறுமாதம், ஒரு வருஷம், 3 அல்லது 5 வருஷம் என்று இருக்கிறது. நான் சொன்ன மாதிரி, இடையிலே அவர்கள் நல்ல முறையிலே நடந்து கொள்வதாகத் தெரிந்தால், அவர்களை இடையில் அனுப்பிவிடுகிறார்கள். மேற்பார்வை பார்ப்பது இன்ஸ்பெக்டர் ஆஃப் விஜிலென்ஸ்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** தலைவர் அவர்களே, இவ்வாறுள்ள ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களால் உண்மையாக பலன் ஏற்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** உண்மையான பலன் என்றால்? உண்மையான பலன் ஏற்படுவதால்தான், அரசாங்கம் இதை நடத்துகிறது.

**திரு. சா. கணேசன்:** சபாநாயகர் அவர்களே, இந்த விஜிலன்ஸ் அசோசியேஷன் அல்லது கண்காணிப்புச் சங்கம் என்று சொல்லப்படுவதை நடத்துகிற சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. முக்கியமாக மிகப் பெரும்பாலாக பெண்கள்தான் பிடிக்கப்படுகிறார்களே தவிர, மற்றவர்களே இதில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்புவதற்குரிய வழிவகைகள் இருக்கின்றன. ஒழுக்கக் கேடு ஒரு பாலரிடம் மட்டுமின்றி, இருபாலர்களையும் பொறுத்தது. ஆனால் 'ப்ராஸ்டிட்யூட்' என்று பெண்களைமட்டும் பிடிக்கிறார்கள். அதற்குக் காரணமாக இருக்கும் ஆண்களையும் கைது செய்ய உரிய விதியை சட்டத்திலே இதுவரையில் போட இல்லை. (குறுக்கீடு) அந்த இன்ஸ்டிட்யூஷனுடன் தொடர்பு இருந்ததால் சொல்லுகிறேன். அந்த மாதிரிச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆண்கள் பெண்களைப் பயன்படுத்துகிறார்கள். பெண்கள் பாதுகாப்பிற்காக இது இருக்கிறது.

**கனம் சபாநாயகர்:** ஆண்கள் பாதுகாப்பிற்காக இன்னொரு விடுதி ஆரம்பிக்கலாம்.

**திரு. சா. கணேசன்:** பாதுகாப்பதற்கு என்று இல்லை. தண்டனை அடைந்தவர்களை இண்டர்ன்மெண்ட் மாதிரிச் செய்கிறோம். கோர்ட்டுகளில் வழக்குப் போட்டு, தண்டனை கொடுக்கப் படுகிறது. இது பெண்களுக்குத்தான் இருக்கிறது. ஆண்களுக்கு இல்லை.

MR. SPEAKER: Men are also prosecuted.

SRI SAW. GANESAN: They must be prosecuted.

MR. SPEAKER: Even now they are prosecuted.

**திரு. சா. கணேசன்:** அப்படியானால், pimp என்று சொல்லித்தான் தண்டிக்க முடிகிறது, இப்பொழுது இருக்கும் ஆக்டுபடி.

[2nd August 1965

**திரு. எம். எஸ். மணி:** சார், முன்பு அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்தார்கள், அதன்படி, ஒழுக்கக் குறைவு காரணமாகத் தண்டனை அடைந்தவர்கள் திருச்சி மாவட்டத்தில் சுமார் 900 பேர்கள் என்றிருந்தது. நான் அது பற்றி விசாரிக்கிற போது, அங்கே இப்படிப்பட்ட காரியத்தில் 10, 12 பெண்கள்தான் ஈடுபட்டிருந்தார்கள் என்றும், அவர்கள் திரும்பத் திரும்ப தண்டனை அடைந்து வருவதால் இப்படிப்பட்ட புள்ளி விவரம் கிடைக்கிறது என்று தெரிந்தது. ஆகவே, அப்படிப் பட்டவர்களை அரசாங்கமே இந்த இல்லங்களுக்கு அனுப்ப முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** அவ்வப்பொழுது தண்டனை அடைந்தவர்கள் இந்த நிலையத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். இப்பொழுது 123 பெண்கள் என்று நான் சொன்னேன். திருச்சியில் 20 பெண்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல்

* 57 **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடைபெற்ற பஞ்சாயத்து தலைவர் தேர்தல்களில் கலகங்கள் ஏற்பட்டதன் காரணமாக தேர்தல் ஒத்தி வைக்கப் பட்டதா ?

(இ) ஆம் எனில், ஒத்திவைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்

9-30 a.m. (இ) பதிமூன்று.

**திரு. பி. கே மூக்கையா தேவர்:** தேர்தல் கலவரம் காரணமாக நடைபெற்றிருக்கிற துப்பாக்கிச் சூடு அல்லது வேறு எதனாலோ அந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி பஞ்சாயத்துத் தேர்தலில் இல்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தேர்தலை ஒத்திவைப்பதன் காரணம் தேர்தல் காலங்களில் போதிய போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியாத நிலையா ? அல்லது, ஆளும் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களுக்கு ஆதரவு கிடைக்காது என்ற அச்சமா?

**கனம் திரு. சே. ம. மஜீத் :** கட்சிச் சார்பாக பஞ்சாயத்துத் தேர்தல் இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தேர்தல் நடந்தபோது பல இடங்களில் கலவரங்கள் நடந்திருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல், மதுரை ஜில்லாவில் சேடப்பட்டியில் துப்பாக்கிச் சூடு நடந்தது அமைச்சருக்குத் தெரியுமா? அதன் காரணமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதா? அல்லது நடத்தப்பட்டதா?



2nd August 1965]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை. 13 இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டதன் காரணமாகத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன என்று சொன்னேன். 'பல இடங்களில்' என்று சொல்வது சரியல்ல. 13 இடங்களில்தான்.

**திரு. ம. கமலநாதன் :** தேர்தல் காரணமாக நடைபெற்ற கலவரங்களைப்பற்றிப் பத்திரிகைகளில், கொலை, வெட்டு, குத்து என்று செய்திகள் வருகின்றனவே, அவை பற்றி ஏதாவது அமைச்சர் தகவல் வைத்திருக்கிறார்களா? இதிலே யாராவது இறந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, தேர்தல் காலங்களில் என்ன என்ன காரணங்களால் கலவரங்கள் ஏற்படுகின்றன? அந்தக் காரணங்களைக் கண்டறிந்து எதிர்காலத்தில் அத்தகைய கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தேர்தல்கள் ஏற்கனவே முடிந்துவிட்டன. என்ன காரணங்களால் கலவரங்கள் ஏற்பட்டன என்கிற அந்த ஆராய்ச்சியில் இப்பொழுது இறங்குவதற்கில்லை. ஆனால், பொதுவாக, பஞ்சாயத்துத் தலைவராகவோ, பஞ்சாயத்து வார்டு அங்கத்தினராகவோ, அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவராகவோ ஒரு சிலர் வர முடியவில்லை என்ற காரணத்திற்காகவும் இருக்கலாம் என்பதையும் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சமீபத்திலே நடந்த பஞ்சாயத்துத் தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தேர்தல் பற்றிக் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் அவர்கள் குறிப்பிடுகையில், 'மிகவும் ஊழல் அதிகரித்திருக்கிறது, ஆகவே தேர்தல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்று கூறியுள்ளதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்துத் தேர்தல் நேரடித் தேர்தலாக இருக்கவேண்டுமா, மறைமுகத் தேர்தலாக இருக்க வேண்டுமா, எப்படித் தேர்தல் நடத்த வேண்டும் என்பதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதைக் கனம் அங்கத்தினர் உணர்வார்கள்.

**திரு. எஸ். மணி :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்கள் தாக்கி அல்லது கடத்திச் செல்லப்படுவதன் காரணமாக இப்படிக் கலவரம் ஏற்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியென்றால், கடத்திச் செல்லாத முறையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** என்ன என்ன காரணங்களினால் எம்மாதிரி தேர்தல் கலவரம் ஏற்பட்டது என்று கனம் அங்கத்தினர் எழுதியனுப்பினால், அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. எம். எஸ். மணி :** இந்தப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் ஏற்பட்ட கலவரங்களில் யாரேனும் அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படித் தாக்கப்பட்டிருந்தால் எத்தனை அதிகாரிகள் தாக்கப்பட்டார்கள்? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி விவரத்திற்குத் தனிக் கேள்வி வேண்டும். தற்போது என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இந்தக் கலவரங்கள் நடந்தது 13 இடங்களில் என்று சொன்னார்கள். எந்த எந்த இடம் என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வடாற்காடு ஜில்லாவில் பொந்தை பெருங்கொளத்தூர், செ. கூடலூர், மேல்புழுதியூர், பாவுப்பட்டு, திம்மனமுத்தூர். தென்னாற்காடு ஜில்லாவில் விரியூர், வீரசோளபுரம். தஞ்சாவூர் ஜில்லாவில் மருதநல்லூர். திருச்சி ஜில்லாவில் பொட்டவெளி, நாதப்பூர், பென்னகோணம். மதுரை ஜில்லாவில் தேவாரம். இந்தப் பதின்மூன்று இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டன.

### பஞ்சாயத்து தற்காலிக தலைவர்களின் வயதை நிர்ணயித்தல்

* 58 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்துத் தற்காலிக தலைவர் நியமனத்தில் வயதை நிர்ணயிப்பதற்கு வாக்காளர் பட்டியலில் கண்டுள்ள வயதை எடுத்துக் கொள்கிறார்களா அல்லது ஜாதகம் போன்ற பிற தஸ்தாவேஜுகளைக் கொண்டு நிர்ணயிக்கின்றார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்துத் தற்காலிகத் தலைவர்களை நியமனம் செய்வதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வாக்காளர் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள வயதே பொதுவாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து தற்காலிகத் தலைவரை நியமிப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. வயதை ஒட்டித் தலைவரை நியமிப்பதற்குப் பதிலாக, புதிதாகத் தேர்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பழைய தலைவரே மீண்டும் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரே தொடர்ந்து பதவியில் இருக்கலாம், அல்லது பழைய தலைவரை புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிற இடைக்காலத்தில் தொடர்ந்து இருந்து அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தால் இப்படிப்பட்ட சங்கடம் வராது. அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** வயதில் கூடியவராக யார் இருக்கிறாரோ அவர் புதிய உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே தலைவர் ஒருவரைத் தேர்தெடுத்துக்கொள்ளும் வரை தற்காலிகத்





தலைவராக இருக்க வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது மேற்கொண்டு பிரச்னை எழுந்தால் அதைப் பற்றி அவ்வப்போது பரிசீலிக்கலாம்.

**திரு. முனு. ஆதி :** சில பஞ்சாயத்துக்களில் தேர்தல் நடக்காமல் வழக்கு மன்றத்தில் வழக்கு இருப்பதால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்குத் தற்காலிகத் தலைவராக யாரை நியமிப்பது என்ற பிரச்னை அங்கங்கேயே இருக்கிறது. அதற்கு ஏதாவது அரசாங்கம் வழிவகை செய்யுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அரசாங்கம் உத்தரவிட இயலாது என்பதைக் கனம் அங்கத்தினரே அறிவார்கள்.

**திரு. மு. பொ. வடிவேல்:** வேறு நபர்களைத் தற்காலிகமாகத் தலைவராக நியமிப்பதன் காரணமாகப் புதிய தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் பல இடங்களில் கலவரம் நடக்கிறது என்பதை அமைச்சர் அறிவாரா? அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தற்காலிகத் தலைவரிடம் அம்மாதிரி பழைய தலைவர் பொறுப்பை ஒப்படைக்கவில்லையானால், சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கும், அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டுவந்ததன் பேரில், உடனே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** தற்காலிகத் தலைவராக வயது முதிர்ந்த வரை மட்டும் நியமிக்கவேண்டிய அவசியம் என்ன? வயது குறைந்திருக்கிறவர்கள் அறிவாற்றல் இல்லாமல் இருக்கிறார்களா? அறிவாற்றலை அடிப்படையாக வைத்துத்தான் தலைவர் நியமித்தல் இருக்க வேண்டும். வயது முதிர்ந்தவர்கள் தான் தற்காலிகத் தலைவராக வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல என்பதை அரசாங்கம் அறியுமா?

**கனம் திரு. சே. ம. மஜீத் :** இது தற்காலிக ஏற்பாடுதான். கிட்டத்தட்ட 15 நாள் அல்லது ஒரு மாதத்திற்கு உள்ள ஒரு ஏற்பாடு. வயது கூடியவர்களுக்கு உலகத்திலே மரியாதை கொடுப்பதென்பது ஒரு மரபாக இருந்து வருகிறது என்பதைக் கனம் அங்கத்தினர் அறிவார் என்று நினைக்கிறேன்

**திரு. மு. பொ. வடிவேல்:** இம்மாதிரி தற்காலிகத் தலைவர்கள் தங்களிடத்தில் உள்ள பொறுப்பை ஒப்படைக்கவில்லை, நான்கைந்து மாதங்கள் ஆகியும் ஒப்படைக்கவில்லை என்று மாவட்டக் கலெக்டர் அவர்களுக்கும் ஜாயிண்ட் டெவலப்மெண்ட் கமிஷனருக்கும் தந்தி கொடுத்தும் இன்னும் சில இடங்களில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அறிவாரா? அதற்கான துரித நடவடிக்கை எடுத்துக்கொள்வாரா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்து எனக்கு எழுதியனுப்பினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பாதுகாப்புக் கைதியாகச் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறையில் இருப்பதால், தொடர்ந்து அந்தப் பஞ்சாயத்து வேலைகளைச் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதற்கென்று மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தற்காலிகத் தலைவர் நியமனம் செய்யக்கூடிய கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** வயதில் பெரியவர்கள் இருக்க வயதில் குறைந்தவர்கள் சில இடங்களில் தற்காலிகத் தலைவர்களாகப் போடப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரி கேஸ்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றனவா ? அப்படியென்றால் சம்பந்தப் பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஸ்பெஸிஃபிக் இன்ஸ்டென்ஸ் இருந்து எழுதி அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

## பஞ்சாயத்துத் தேர்தல்கள்

* 59 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சமீபத்தில் எத்தனை கிராம நகர பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன ?

(இ) தேதி அறிவித்த பின் நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

(உ) போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) அண்மையில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தல்களில் சுமார் 423 நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், சுமார் 12,428 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தல்கள் நடந்தன.

(இ) தேர்தல்கள் நிறுத்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கையும், அவற்றிற்கான காரணங்களும் வருமாறு :—

| தேர்தல் நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள். | பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை. |
|---|---|
| உயர்நீதி மன்றத்தால் தடை ஆணை பிறப்பிக்கப் பட்டதால் | 112 |
| நியமனபத்திரங்கள் தாக்கல் செய்யப்படாததால் | 197 |
| நியமனங்கள் திரும்பப் பெறப்பட்டதால் | 62 |
| நியமனங்கள் மறுக்கப்பட்டதால் | 28 |
| நிர்வாக இடையூறுகளால் | 4 |
| நகராட்சிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டதால் | 9 |
| மற்ற காரணங்களால் | 12 |



எண்பத்தேழு கிராம பஞ்சாயத்துக்களிலும், 11 நகர பஞ்சாயத்துக்களிலுமே பஞ்சாயத்து முழுவதற்குமான தேர்தல்கள் நிறுத்தப்பட்டன. மற்ற பஞ்சாயத்துக்களில் குறிப்பிட்ட சில வார்டுகளில் மட்டுமே நிறுத்தப்பட்டன.

(உ.) 15,694 பஞ்சாயத்து வார்டுகளில் போட்டி இல்லை. 45,780 அங்கத்தினர்கள் எதிர்ப்பில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தார் டைஃபிகேஷன் சரியான முறையில் செய்யப்படவில்லை என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி தேர்தல் நடக்கக் கூடாது என்று தடை உத்தரவு போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, தொகுதிகளைச் சரியான முறையில் டைஃபர்கேட் செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்புகள் வழக்குகளுக்குத் தகுந்தாற்போல இருக்கும் என்பதைக் கனம் அங்கத்தினர்களே அறிவார்கள். அவர்களது தீர்ப்புகளில் பிரிவினை சம்பந்தமாகவும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கலாம். முறைப்படி டைஃபர்கேஷன் செய்து பரிசீலிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** போட்டியே இல்லாமல் தேர்தல் நடந்துள்ள பஞ்சாயத்துக்களில் அந்த அந்தப் பஞ்சாயத்து மக்களின் ஒற்றுமைதான் வெளிப்படுகிறது. மற்ற எல்லா ராஜ்யங்களிலும் கொடுக்கப்படுவதுபோல நம் ராஜ்யத்திலும் அரசாங்கம் இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு பிரத்யேக மானியம் அளிக்க முன்வருமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** எல்லா ராஜ்யங்களிலும் அப்படி இல்லை. ஆந்திராவில் மட்டும் தான் இன்சென்டிவ்வாக கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் 50 சதவிகிதத்துக்கு மேல் போட்டியில்லாமல் தேர்தல் நடந்த பஞ்சாயத்துக்கள் இல்லை. அம்மாதிரி இன்சென்டிவ் கொடுக்காமலேயே நம் ராஜ்யத்தில் 38 முதல் 40 சதவிகிதம் வந்திருக்கிறது. இன்னும் இந்த நல்ல பண்பை மக்களிடத்தில் வளர்ப்பதற்கு கனம் அங்கத்தினர்கள் நல்ல பிரசாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** உயர்நீதி மன்றத் தீர்ப்பால் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களில் பலவற்றில் மீண்டும் தேர்தல் நடந்துவிட்டது. இனி தேர்தல் நடக்க வேண்டிய பஞ்சாயத்துகள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எனக்கு ஞாபகம் சுமார் 112 பஞ்சாயத்துகளில் தேர்தல் நிறுத்தப்பட்டது. அவற்றில் 100 பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் முடிந்துவிட்டது. இன்னும் 12 பஞ்சாயத்துக்களில் தான் தேர்தல் நடக்க வேண்டும். ஸ்டே வெக்கேட் ஆனவுடன் அதற்கும் நடத்தப்பட்டுவிடும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** பஞ்சாயத்துகளே அமைக்கப்படாத கிராமங்கள் இருக்கின்றனவா? ஆம் எனில் காரணங்கள் என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

[2nd August 1965

**திரு. ம. கமலநாதன்** : தேர்தல் நிறுத்திவைக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அங்குள்ள அதிகாரிகளே மீண்டும் தேர்தல் நடத்துவதற்குத் தேதியை நிர்ணயித்துத் தேர்தலை நடத்தலாமா? அல்லது அரசாங்கம் தேதி நிர்ணயிக்கிற வரையில் காத்திருந்து அப்புறம் தான் தேர்தல் நடத்த வேண்டுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : ஜில்லா அளவில் கலெக்டரே தேதியை நிர்ணயித்துத் தேர்தலை நடத்தலாம். அதில் டிலே ஆகிறது என்கிற விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. செ. மாதவன்** : இந்தத் தேர்தலுக்கு முதலில் ப்ரப்போசர், செகண்டர் இரண்டு பேரும் வேண்டும் என்று சொல்லப்பட்டது. தேர்தல் நடக்கிறபோது ப்ரப்போசர் மட்டும் இருந்தால் போதும் என்று விதி செய்யப்பட்டது. இந்தமாதிரி விதி செய்த காரணத்தினால் தேர்தலை நடத்தக் கூடாது என்பதாக தீர்ப்பு வழங்கப்பட்டது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இந்த மாபெரும் தவறு எப்படி நடந்தது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : அரசாங்கம் அம்மாதிரி ரூல்ஸ் போட்டதாகத் தெரியவில்லை. எழுதி அனுப்பினால் பரிசீலிக்கிறேன்.

**திரு. எம். எஸ். மணி:** போட்டி இல்லாமல் தேர்தலை நடத்துகிற பஞ்சாயத்துகளுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்று பத்திரிகையில் செய்தி வந்திருந்ததே, அதன்படி வெகுமதி அளிக்கப்பட்டதா ? அல்லது அந்தச் செய்தியே உண்மைக்குப் புறம்பானதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அந்தச் செய்தி உண்மை அல்ல. ஆந்திராவில் கொடுக்கப்போவதாக அறிவித்தார்கள். அதுமாதிரி இங்கும் கொடுக்கப்படலாம் என்ற ஊகத்தில் பத்திரிகை நிருபர்களாக ஊகித்துப் போட்ட தவறான செய்தியாகும் என்று நினைக்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் மெம்பர்களைக் கடத்திக் கொண்டு போவது இருக்க, ப்ரிசைடிங் ஆபிசர்களையே கடத்திக்கொண்டு போனதான சம்பவம் எங்காவது நடந்திருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : அம்மாதிரி தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விசாரித்துப் பார்க்கிறேன்.

### நகரமன்றத் தேர்தல்களின் போது ஆள்மாறாட்டங்கள்

*** 60. கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற நகர மன்றத் தேர்தலில் வாக்குப்பதிவு செய்ய ஆள்மாறாட்டம் செய்தவர்கள் எத்தனை பேர்?

(இ) எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது?



2nd August 1965]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : (அ)—(இ)

நகர மன்றங்கள்—61.

சென்னை மாநகராட்சி—26.

**திரு. செ. மாதவன்** : இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை இப்போது வழங்கப்படுகிறது? அந்தத் தண்டனையை உயர்த்தும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : ஆறு மாத காலம் வரையில் சிறை தண்டனை வழங்கலாம். ஐம்பது ரூபாயில் இருந்து 100 ரூபாய் வரையில் ஃபைன் போடலாம். அந்த வழக்கை விசாரிக்கிற நீதிபதி சந்தர்ப்பத்தைப் பார்த்து தண்டனை வழங்குவார்.

**திரு. செ. மாதவன்** : அபராதம் போடுவதை நிறுத்திவிட்டு, கட்டாய சிறைத் தண்டனை கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : இப்போதுள்ள சட்டத்தைத் திருத்தம் செய்வது மூலமாகத்தான் அது முடியும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : முனிசிபல் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்வதைத் தடுப்பதற்கு ஒவ்வொரு வோட்டரும் வோட்டுச் சாவடியில் கையொப்பமிடுகிற வழக்கத்தை ஏற்படுத்தி, ஒரு அடையாளத்தை ஏற்படுத்த முயற்சி செய்வார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : இது சாத்தியம் இல்லாத யோசனை என்பதை கனம் அங்கத்தினர்களே உணர்வார்கள். பொதுவாக ஆள்மாறாட்டம் செய்வது தவறு என்பதை மக்கள் உணரச் செய்யவால் போஸ்டர், ஹாண்டு போஸ்டர், பில்கள், சினிமா ஸ்லைடுகள் ஆகியவற்றின் மூலம் பிரசாரம் செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளும் கொஞ்சம் விழிப்பாக இருக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, பொதுத்தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்வதைத் தடுக்க ஐடெண்டிபிகேஷன் மார்க் இங்கியினால் செய்கிறார்களே, அதுபோல பஞ்சாயத்துத் தேர்தலிலும் ஏன் செய்யக் கூடாது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : இந்த யோசனையும் கவனிக்கப்படலாம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : தேர்தலில் அதிக அளவு ஆள்மாறாட்டம் நடத்தப்படுகிறது என்று அண்மையில் நடந்த உயர் நீதி மன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதை கனம் அமைச்சர் அவர்களும் படித்திருப்பார்கள். இதைத் தடுப்பதற்கு ஒருசில குறிப்பிட்ட இடங்களிலாவது நான் சொன்ன யோசனையை ஏன் பரிசீலித்துப் பார்க்கக் கூடாது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : ஒரு சில இடங்களில் நடத்துவதனால் ராஜ்யம் முழுவதிலும் ஏற்படக் கூடிய தவறை எப்படி நிவர்த்திக்க முடியும்? கனம் அங்கத்தினர் கூறியுள்ள யோசனையைப் பரிசீலித்துப் பார்க்கலாம். இதனால் தவிர்க்க முடியும் என்றால் சீராக எல்லா இடங்களிலும் தான் இதை அமல் நடத்த வேண்டும்.

[2nd August 1965

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த ஆள்மாறாட்டத்தைத் தடுப்பதற்காகப் பரீட்சார்த்தமாக சென்னை நகரத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, ஓட்டருக்கு அவருடைய போட்டோ பிரதியுடன் கூடிய அடையாளச் சீட்டைக் கொடுத்தால் என்ன என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இந்த முறையைக் கையாண்டால் தேர்தல் நடைமுறைச் செலவு அதிகமாகும். •சொல்லக்கூடிய யோசனை கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், அது நடைமுறையிலே தேர்தல் செலவை அதிகமாக்கிவிடும்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) PROMULGATION OF PROHIBITORY ORDER.

MR. SPEAKER : The hon. the leader of the opposition and hon. Members Sri M. Kalyanasundaram and Sri K. A. Mathialagan have given notice of a motion for adjourning the business of the House to discuss the promulgation of prohibitory order in the City and in the State.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவரவர்களே, இந்திய அரசியல் சட்டப்படி வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் தமிழ்நாடு பூராவும் 144 தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றி விவாதிக்க இந்தச் சபையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை நான் கொண்டு வருகிறேன். இன்று இந்த 144-வது செக்ஷன் தடை உத்தரவு தமிழ் நாடெங்கும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் இன்று ஆர்ப்பாட்டங்களின் மூலம் தங்களுடைய விண்ணப்பங்களை ஆங்காங்கே உள்ள அதிகாரிகளிடத்திலே கொடுப்பதற்காக இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் ஊர்வலமாக வந்து தங்கள் தங்களுடைய விண்ணப்பங்களை ஆங்காங்கே உள்ள அதிகாரிகளிடத்தில் கொடுப்பது என்பது ஜனநாயக முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு முறைதான். அதேபோன்று ஊர்வலமாகச் சென்று, கூட்டமாகச் சென்று, அமைச்சர்களிடத்திலும் அளிப்பது வழக்கமாக இருந்து வருகிற ஒன்றுதான். அடிக்கடி இதைப்போன்ற ஊர்வலங்கள் பாராளுமன்றத்தின் முன்னாலும்கூட நடைபெறுகின்றன. தங்கள், தங்கள் குறைகளை அரசாங்கத்திற்கும், அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறவர்கள் ஊர்வலமாகச் சென்று எடுத்து வைக்கிறார்கள். வேறு எந்த வகையிலும் சட்ட விரோதமாகச் செல்லாமல் ஊர்வலமாகச் சென்று விண்ணப்பங்களைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அக்கட்சியினர் முடிவு எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. அக்கட்சியின் நோக்கங்களும், கொள்கைகளும், நடவடிக்கைகளும் மற்றக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்னையைப்



2nd August 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பொதுத்தவகையில் இது அடிப்படை உரிமையைப் பாதிக்கின்ற பிரச்னை. வேறு கட்சிக்காரர்களையும் பாதிக்கத் தக்க அளவிலே இந்தத் தடை உத்தரவு அமைந்திருக்கிறது; இது அவசியமா என்று அறிய வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி ஆராய்ந்தால் தான் முழுத் தெளிவு பெற முடியும். ஆகவே, அந்த வகையில் ஆராய்வதற்காக இந்த மன்றத்தின் நிகழ்ச்சிகளைத் தள்ளி வைப்பதால் இதற்கு ஒரு முடிவு ஏற்படும் என்ற காரணத்தால் இந்தச் சபையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I have given notice of the following adjournment motion :

" That the House do stand adjourned to discuss the following urgent matter of public importance, viz., the promulgation of prohibitory order by the Commissioner of Police, Madras, prohibiting demonstrations and assembly before Fort St. George and the consequent denial of lawful exercise of Constitutional rights. "

மேற்படி தீர்மானத்தை இந்தச் சபை அனுமதிக்கவேண்டுமென்ற காரணத்திற்காகக் கொண்டு வந்திருக்கிறேன். இதேபோன்று எதிர்க்கட்சி தலைவர் அவர்களும், சென்னை நகரம் மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதிலுமே இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் அம்சங்களைப்பற்றிச் சொல்கின்றபொழுது, முக்கியமாக நான்கு விவரங்களை மட்டும் நான் உங்களிடத்திலே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்ட சபையின் முன்னால் அமைதியாகக் கூடி அவர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடுவது குற்றமாகாது. அமைதியாகத் தங்களுடைய குறைகளை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது, எந்த ஒரு தனிப்பட்ட குடிமகனோ, அல்லது மக்களோ வெளியிடுவது என்பது, நமக்கு எல்லாம் இருக்கிற ஜனநாயக உரிமையாக இருக்கிறது. இதே மன்றத்தின் முன்னால் இதைப் போன்ற பல ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. வாரத்திற்கு ஒரு தடவை நம்முடைய தாய்ப் பாராளுமன்றமாகிய டெல்லிப் பாராளுமன்றத்திற்கு முன்பும் நடந்துவருகிறது. இதற்காகக் குறிப்பிட்டுள்ள விவரங்களில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டிப்பதற்காக டெமான்ஸ்டிரேஷன் செய்வது தான் என்று இருக்கிறது. To focus the attention of the Assembly on this question என்று இருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்பதுதான் முக்கியமே தவிர, பிரீச் ஆப் பிரிவிலஜ் முக்கியமில்லை. கமிஷனர் அவர்களுடைய உத்தரவில் 3-வது பாராவில்

" And whereas I consider that the situation is likely to be exploited by other anti-social elements and political agitators in the City resulting in acts of mischief and violence leading to disturbances of public peace and tranquillity and public order."

என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவும் ஒரு அப்ரஹென்ஷனாலே

தான். அநுமானத்திலேதான் செய்யப்படுகிறதே தவிர, அது உண்மையாகவே இருக்கிறதா என்ற விவரங்கள் கொடுக்கப்படவில்லை. இது அரசியல் கட்சிகளினுடைய உரிமைகளை முடக்குவதற்கும், ஒடுக்குவதற்கும் இருக்கிற மேலோட்டமான காரணமாகத்தான் இருக்கிறது. வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளும், இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் எல்லாம் ஒன்றுதான். ஆன்டி சோஷியல் எலிமெண்ட்ஸ் சேர்வார்கள். அதனாலே தடை விதிக்கப்படுகிறது என்றிருக்கிறது. இதுவும் அநுமானிக்கப்பட்ட விஷயமாகும். இதிலே சென்னை நகரத்திற்கு ஒரு சாபக்கேடு இருக்கிறது. இங்கே போலீஸ் கமிஷனர்தான் மாஜிஸ்டிரேட், இங்கே போலீஸ்காரர்கள்தான் போலீஸ் அதிகாரி, இங்கே . . . .

MR. SPEAKER: The hon. Member is going out of the track.

SRI K. A. MATHIALAGAN: Sir, I am speaking about the powers of the Magistrate.

MR. SPEAKER: That is a statutory matter. The question has been settled by a statute. The hon. Member must tell how the prohibitory order is not in order.

**திரு. கே. ஏ. மதியழகன்:** போலீஸ் கமிஷனர்தான் மாஜிஸ்டிரேட் ஆக இருக்கிறார். அவர் நியாயமான காரியங்களுக்கு, சட்டபூர்வமான காரியங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். பாதுகாப்புக் கொடுப்பதற்காக அமைச்சர் அவர்கள் 50 லட்ச ரூபாய் கேட்டார்கள். ஐம்பது லட்சம் ரூபாய் பந்தோபஸ்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, "the situation is likely to be exploited by other anti-social elements . . ." என்று சொல்வது பொருந்தாத வாதம் என்பதை வற்புறுத்துகிற நோக்கில் போலீசாருக்கு ஒரு கடமை (பாத்திரம்) இருக்கிறது என்பதையும் நினைவூட்டுகிறேன். இந்த நாட்டில் கர்ஃப்யூக்களை வைத்துக்கொண்டு ப்ரொகிபிட்டரி ஆர்டர்களை வைத்துக்கொண்டு இருக்கக்கூடாது. இந்த ஊரிலேயும் மற்ற ஊர்களிலும் கருத்துக்களை வெளியிடுகிற உரிமைகளை நிறுத்தியிருக்கிறார்கள். அரசியல் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதற்கு வேண்டிய போதுமான காரணங்கள் இல்லாமல் அடிப்படை உரிமையையே பறிக்கிற காரணத்தால், இதைப்பற்றி ஆராய இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய ஒத்திவைப்புப் பிரேரணை, போலீசார் தடை உத்திரவு பிறப்பித்து, சட்டசபையை நோக்கி வரும் சாலைகளில் ஊர்வலங்கள் கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியது. இந்த சட்டசபையிலே இருந்து சபாநாயகர் அவர்களோ அல்லது வேறு யாருமோ சட்ட சபைக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று போலீசாருக்கு என் சொல்லியிருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சட்டசபை



என்பது புனிதமான ஒரு மன்றம். இந்த சட்டசபை கூடக்கூடிய சமயத்தில் சட்டசபை அங்கத்தினர்களும், மக்களுடைய கஷ்டங்களையும் குறைகளையும் புரிந்துகொள்வதற்காக அணிவகுப்புகள் நடத்துவதும், ஊர்வலங்கள் நடத்துவதும், கோஷங்கள் போடுவதும் முறையானதுதான். முதலமைச்சர் அவர்கள் ஆதரிக்கக்கூடிய கருத்துக்களை மாத்திரம் சொல்வது ஜனநாயக சுதந்திரமல்ல. முதலமைச்சர் அவர்கள் ஆதரிக்காத கருத்துக்களையும், எதிர்க்கிற கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கும் சுதந்திரம் இருந்தால்தான் அதற்கு உண்மையான சுதந்திரம் என்பது அர்த்தம். பலாத்காரச் செயல்களிலே ஈடுபட்டாலோ எம்.எல்.ஏ.-க்கள் சபைக்கு வருகின்ற பொழுது கற்களை எடுத்துப் போடுவதில் ஈடுபட்டாலோ அப்படிப்பட்ட பலாத்கார நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்கிறது. போலீசார் சட்டப்படி அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்; பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். ஆனால் அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடத்துவதாலோ, சட்டசபை முன் நின்று ஆர்ப்பாட்டம் செய்வதாலோ இந்தச் சட்டசபைக்கு என்ன ஆபத்து வந்துவிடும்? கேட்டுக்கு வெளியே நின்று ஆர்ப்பாட்டம் செய்வது என்பது வழக்கமாக இருந்த ஒன்றாகும். எல்லாக் கட்சியினரும் ஆளும்கட்சியைத் தவிர அவ்வாறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அது ஆளுங்கட்சிக்கு அவசியமில்லாமல் இருக்கலாம். பிரச்சினை குறிப்பாகத் தடை உத்தரவோடு மட்டும் நிற்கவில்லை. மாவட்டங்களிலிருந்து பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 120 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஏன் இப்படிப் பரபரப்பை ஏற்படுத்தவேண்டும்? இப்படிச் செய்வது இந்தச் சபையின் கவுரவத்தை குறைப்பதாக இருக்கிறது. அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதன் காரணமாக ஆபத்து ஏற்பட்டு விடுமென்று இந்தச் சபையிலுள்ள யாரும் பாதுகாப்புக் கேட்கவில்லை. சபாநாயகர் அவர்களும் போலீசாருக்குத் தெரிவிக்கவில்லை. அப்படி இருக்கையில் ஏன் இப்படித் தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும்? போலீசாருடைய பாதுகாப்பிலேதான் இந்தச் சபைக் கூட்டம் நடக்க வேண்டுமென்று சொல்லக் கூடிய அளவுக்கு இந்த நாட்டிலே எதிர்ப்போ, கலகமோ இல்லை, இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய தலைவரை விடுதலை செய்ய வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். வலது சாரி கம்யூனிஸ்டுகள்—என்னைக் கலந்து ஆலோசிக்காமல் முடிவு செய்ய மாட்டார்கள் ஆயினும்—சேலம் உருக்காலை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக ஆர்ப்பாட்டம் செய்யவேண்டுமென்று முடிவு செய்தார்கள். சேலம் உருக்காலையைப் பொறுத்த வரை அதைக் கட்சிப் பிரச்சினையாக ஆக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. அது ஆளும் கட்சியினரும் சேர்ந்து வற்புறுத்த வேண்டிய ஒன்று; அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும் ஒரு சிலர் சேர்ந்து 'சேலம் உருக்காலையை அமைக்க நடவடிக்கை எடுங்கள்' என்று சொல்வதாலே என்ன ஆபத்து வந்து விடும்? இந்தமாதிரி எந்த ஒரு கிளர்ச்சியையும், ஆர்ப் 10-00 a.m.

பாட்டத்தையும் அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னால் மக்களுடைய உணர்ச்சி அராஜகமான வழிக்குத் திரும்பிவிட வழி உண்டாகும். மக்கள் தங்களுடைய உணர்ச்சியை வெளிப்படுத்தக் கூடிய இந்த முறைகளுக்கெல்லாம் தடை விதிப்பது சரியல்ல. இதையெல்லாம் சட்ட பூர்வமாகப் பார்க்கக் கூடாது. நம்முடைய ஜனநாயகத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். நமது யூனியன் உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களும் போகும் போது கருப்புக் கொடி காட்டக் கூட அனுமதி அளித்திருக்கிறார்கள். பெங்களூரில் பிரதம மந்திரி காரில் போய்க் கல் விழுகின்ற அளவுக்குச் சுதந்திரம் அளித்திருக்கிறார்கள். நான் அதை ஆதரிக்கவில்லை, அது தவறுதான். ஆனால் அங்கே அதற்கெல்லாம் தடை விதிக்கக் காணோம். நம்முடைய ராஜ்யத்தில் மூச்சு விட்டால் போதும், சர்க்கார் கட்சியைக் கண்டிக்கிறேன் என்று சொல்லிவிட்டால் போதும், உடனே இந்த மாதிரி நடவடிக்கைகளையும், தடை உத்தரவுகளையும் மேற்கொள்கிறார்கள். இந்தச் சட்டங்களை ரத்து செய்யவேண்டும். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று சொல்லி ஆர்ப்பாட்டம் ஊர்வலம் நடத்த சுதந்திரம் கொடுங்கள். இது ஒரு சட்ட பூர்வமான முக்கியமான பிரச்சினையாகையால் இதுபற்றி விவாதிக்க இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களாலும் மற்ற இரு கனம் உறுப்பினர்களாலும் பிரேரேபிக்கப்பட்ட பிரேரணைகள் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியவையல்ல. அந்தப் பிரேரணைகள் இரண்டு வகையானவை. ஒன்று சென்னை நகரில் போலீசாரால் போடப்பட்ட தடை உத்தரவு. ஏதோ ஒரு காரணத்தையொட்டி ஊர்வலமாக வந்து இந்த மன்றத்தின் முன்னால் டெமான்ஸ்ட்ரேஷன் நடத்தப் போகிறார்கள் என்ற தகவலை வைத்துக் கொண்டு அதைத் தவிர்க்கும் வகையிலே அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டசபையைச் சுற்றி ஓரளவுக்கு இது தடுக்கப்பட வேண்டுமென்பதே தவிர, மற்றபடி அவர்கள் ஊர்வலமாக வருவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஊர்வலத்தை விட்டு விட்டு தனியாக அவர்கள் வந்து சட்ட மன்ற நடவடிக்கைகளைப் பார்க்கலாம், சட்ட மன்ற உறுப்பினர்களைப் பார்க்கலாம், தங்களைச் சந்தித்து மகஜர் கொடுக்கலாம், அப்படிக் கொடுப்பதற்கெல்லாம் தடை ஒன்றும் இல்லை. மற்றொரு பிரேரணை என்னவென்றால், எதிர்க்கட்சியினர் குறிப்பிட்ட விஷயம் என்னவென்றால் மாநிலத்திலே வெளியூர்களிலே போடப்பட்டிருக்கிற தடை உத்தரவு பற்றியதாகும். ஒருசிலர் ஊர்வலமாக வந்து கலெக்டர் அவர்களைச் சந்தித்து பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையைத் தெரியப்படுத்துவது என்று முடிவு செய்திருந்தார்கள். கலெக்டர் அவர்கள் அவர்களைப் பாதுகாப்பில் வைக்கவில்லை. இருந்தாலும் கலெக்டர் அவர்களைப்





பார்த்துச் சொல்லலாம். ஆனால், ஊர்வலமாக வருவதைப் பற்றித்தான் தடை. ஊர்வலம் வருவதற்கு உரிமை இருக்கிறது என்பது உண்மைதான்; டெமான்ஸ்ட்ரேஷன் செய்யவும் உரிமை இருக்கிறது. டெமான்ஸ்ட்ரேஷன் செய்ய உரிமை இருப்பது மாதிரி அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் பாதுகாப்புப் பெற வேண்டியதும் அவர்களுடைய உரிமையாக இருக்கிறது. மாணவர்கள் கிளர்ச்சி செய்த சமயத்தில் நடந்த சம்பவங்கள் கனம் அங்கத்தினர்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். மேல் மன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்த மன்றத்திற்கு வரவேண்டிய ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டார். அதை கனம் அங்கத்தினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அந்த அனுபவம் எல்லாம் நமக்கு இருக்கிறது. டெமான்ஸ்ட்ரேஷன் உரிமை என்று சொன்னால், மன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுவது கூட உரிமையா? கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் "பெங்களூரில் பிரதம மந்திரி கார் மீது கல் எறிந்தார்கள். அந்த அளவுக்குக்கூட உரிமை வழங்கப்படவில்லையா?" என்று கேட்டார்கள். அதற்கு உரிமை வழங்கவில்லை. எதிர்க்கட்சியினர் கூறுகின்றபடி கூட்டமாக வந்தால் வரட்டும் என்று அனுமதி கொடுத்தார்கள். ஆனால், அவர்கள் கல்லை எடுத்து எறிந்தார்கள். ஆகவே, அமைதியை பாதுகாப்பது என்பது போலீசாருடைய கடமை. வெளியூர்களில் மாஜிஸ்ட்ரேட்டைக் கலந்து தடையுத்தரவைப் போடுகிறார்கள். ஊர்வலமாக வந்து ஆர்ப்பாட்டம் நடத்துவதால் அமைதிக்குப் பங்கம் வரும் என்ற அனுபவம் நமக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் அதை மறந்து விட்டு மறுபடியும் அமைதிக்குப் பங்கம் வரும்படியாக விடுவது போலீசார் பொறுப்பை வகிக்க உகந்தது அல்ல. அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் வெளியூர்களில் இந்தத் தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. தடை உத்தரவு போடப்பட்ட பிறகு அதை மீறினால் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் அது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல, சாதாரண வகையில் நிர்வாக வகையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திற்கு வெளியே டெமான்ஸ்ட்ரேஷன் செய்வதற்கு உரிமையுண்டு என்று சொல்கிறார்கள். முன்னால் நடந்திருக்கலாம், அதனால் ஏற்பட்ட அனுபவமும் நமக்கு இருக்கிறது. நான் ஒன்றை தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம். பொறுப்புள்ளவர்கள் மன்றத்திலே அங்கம் வகிக்கிறார்கள். மக்களுடைய கருத்துக்களை, அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த மன்றம் விளங்குகின்றது. இந்த மன்றத்தில் பங்கு பெற்றிருக்கின்றவர்களிடத்தில் வெளியில் இருப்பவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அவர்கள் ஒரு கூட்டம் போட்டு தங்களுக்கு வேண்டிய மன்ற உறுப்பினர்களை அழைத்து அங்கே தெரிவிக்கலாம். மகஜர்கள் மூலம் தெரிவிக்கலாம். எவ்வளவோ மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; தங்களுக்குக் கூட மகஜர்கள் சமர்ப்

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1965

பிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறெல்லாம் வெளியிலே இருக்கின்றவர்கள் தங்களுடைய கருத்துக்களை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அந்த உறுப்பினர்கள் மூலமாக மன்றத்திலே அந்தக் கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்வதுதான் முறையாகும். இப்போதும் மன்றம் நடக்கிறது. மன்றம் நடக்கிறபோது வெளியிலே கூட்டம் போட்டு தீர்மானம் போட்டு அனுப்புவதற்குப் பதில் கட்டடத்திற்கு வெளியே கூடுவதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லி, பிறகு கட்டடத்திற்கு உள்ளே வரவும் உரிமை இருக்கிறது என்று கூறி, அதற்குப் பிறகு விசிட்டர்ஸ் காலரிக்குள் வரக் கூட உரிமை இல்லையா என்று கேட்கக் கூடிய அளவுக்குச் செல்லும். இந்த மன்றம் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. இந்த மன்ற அங்கத்தினர்கள் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றுகின்றார்கள். அப்படி இருக்கும்போது வெளியிலே இருந்து கூட்டமாகச் சேர்ந்து டெமான்ஸ்ட்ரேஷன் செய்வது என்பது இந்த மன்றத்தின் நோக்கத்திற்கு உகந்தது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்கள் டெமான்ஸ்ட்ரேஷனைத் தடுத்தது இந்த மன்றத்தின் நோக்கத்திற்கு உகந்தது அல்ல என்று கூறுகிறார்கள். நான் கூறுவேன், அந்த மாதிரி டெமான்ஸ்ட்ரேஷன் செய்ய அனுமதிப்பது இந்த மன்றத்தின் நோக்கத்திற்கு உகந்தது அல்ல என்று. டெமான்ஸ்ட்ரேஷன் செய்வதால் பரவாயில்லை என்று சொல்லி அனுமதி கொடுத்ததால் ஏற்பட்ட விளைவுகளை நாம் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறோம். ஆகவேதான் போலீஸ் கமிஷனர் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு என்னிடம் கூடச் சிலர் வந்து தங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி எழுதி வைத்திருப்பதாகவும், என்னிடம் கொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். எப்போது வேண்டுமானாலும் வரட்டும்; என் அறைக்கு வந்து கொடுக்கலாம் என்று தெரிவித்தேன். நான் போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவின் நியாயத்தைப் பற்றிக் கூறினேன். எதிர்க்கட்சியினர் எப்படி இருந்தாலும் அந்த நியாயத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்றும், பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் போடப்பட்ட உத்தரவுதான் இது. இது நிர்வாக வகையில் போடப்பட்ட உத்தரவு. இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவசரப் பிரேரணையை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் எதிர்த்துத்தான் ஆக வேண்டும். ஆனால் அப்படி எதிர்க்கிறபோது எங்கள் கருத்துக்களுக்கு கொஞ்சமாவது மரியாதை கொடுக்கக் கூடாதா? குதர்க்கமா செய்ய வேண்டும்? இந்த சபைக்குள் வந்து உட்கார உரிமை இருக்கிறது என்று யாரும் சொல்வார்களா? அப்படிச் சொன்னால் அது பைத்தியக்காரத்தனம் என்று தெரியாதா? மக்கள் வோட்டு பெற்றுத்தான் இந்த சபையில் வந்து உட்காரலாம் என்பது அவர்களுக்குத் தெரியாதா?



2nd August 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

காலரியில் உட்கார வேண்டுமானால் தங்கள் உத்தரவு இல்லாமல் கவர்னர் கூட உட்கார முடியாது. வெளியே நிற்க உரிமை கேட்பது, அதை நாங்கள் ஆதரிப்பது என்றால் இங்கே உள்ளே வர ஆதரவு கொடுக்கிறோம் என்றால் அவ்வளவு கேவலமாக பொறுப்புணராமலா இருக்கிறோம்? எங்கள் உணர்ச்சிகளை அந்தமாதிரி கேவலப்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Promulgation of prohibitory orders comes under administration of law and order. There are other forums before which such matters ought to be raised. I do not think this is a matter for an adjournment motion and hence, I withhold my consent to it.

(2) DELAY IN THE DESPATCH OF S.S.L.C. BOOKS.

MR. SPEAKER: The hon. Member, Sri M. V. Karivengadam has given notice of an adjournment motion regarding delay in sending S.S.L.C. books to the mofussal centres.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு முடிவுகள் ஜூலை 15-ம் தேதி சென்னையில் வெளியிடப்பட்டு வெளி ஊர்களில் 16-ம் தேதி வெளியாகிறது. இருந்தாலும் கூட முடிவுகள் எல்லாம் "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "மெயில்", "இந்து" போன்ற பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவில்லை. காரணம், மூன்று நாட்களுக்கு முன்னதாக தேர்வு முடிவுகள் அவர்களிடம் கொடுக்கப்படவில்லை. அது மட்டுமல்லாமல் இங்கிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. சர்டிபிக்கேட் புத்தகங்கள் மிகக் காலதாமதமாக வெளி ஊர்களுக்கு அனுப்பப்பட்ட காரணத்தினால், பல கல்லூரிகளில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு முடிவுகள் வெளியிட்ட பத்து நாட்களுக்குள்ளாக அந்த மாணவர்கள் தாங்கள் பெற்ற மார்க்குகளுடன் விண்ணப்பத் தாள்கள் கல்லூரிகளுக்கு சேருமாறு அனுப்ப வேண்டுமென்ற விதிமுறை இருந்த காரணத்தினாலும், எஸ்.எஸ்.எல்.ஸி. சர்டிபிக்கேட் புத்தகங்கள் பத்து நாட்கள் கடந்து அனுப்பப்பட்டதாலும், தேர்வு முடிவுகள் ஜூலை 15-ம் தேதி வாக்கில் வெளியிடப்பட்டு வெளி ஊர் மாணவர்களுக்கு ஒரு சில ஊர்களுக்கு 26-ம் தேதியும், பெரும்பாலான ஊர்களுக்கு 26, 27, 28-ம் தேதி வாக்கில் கிடைத்திருக்கிற காரணத்தினால், கல்லூரிகளுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பத்து நாட்களுக்குள்ளாக மாணவர்கள் தாங்கள் வாங்கிய மார்க்குகளுடன் விண்ணப்பத்தாள்கள் அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனை இருந்த காரணத்தினால், எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் பத்து நாட்களுக்குள் விண்ணப்பத் தாள்களை அனுப்ப முடியாத நிலையில் பல மாணவர்கள் கல்லூரிகளில் இடம் கிடைக்காத நிலையில் தவிக்கிற ஒரு பரிதாபகரமான நிலை இருக்கிறது. இது மிகவும் அவசரம் வாய்ந்தது, பொது முக்கியத்துவமும் வாய்ந்தது. ஆகவே, இந்த விஷயத்தை இந்த மாமன்றம் விவாதித்தால் நல்ல பலன் கிடைக்கும் என்ற நோக்கத்தால் இப்போது நான் இப்பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன். இது சாதாரண நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. ஒவ்வொரு ஆண்டும் ஒரு முறைதான் இப்போது

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [2nd August 1965

தேர்வு நடைபெறுகிறது. வெளியிடப்படுகிற முடிவுகளும் ஒரு முறைதான் வெளியிடப்படுகிறது. ஆகவே ஒரு முறை தவறி விட்டால், நிச்சயமாக உரிய காலத்தில் மாணவர்கள் விண்ணப்பிக்க தவறினால் அது அவர்களுடைய குற்றம் அல்ல. செகண்டரி போர்டார் காலதாமதமாக சர்டிபிக்கேட்களை அனுப்பிய காரணத்தினால்தான் அந்தத் தவறுதலுக்கு நிரபராதிகளான மாணவர்கள் பாதிக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இது மிகவும் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயமாகும். இதைப்பற்றி விவாதிக்க தங்களுடைய அனுமதியைக் கோரி இந்த மாமன்றத்தினுடைய மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை தள்ளிப் போடப்பட்டது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அப்படித் தள்ளிப் போடப்பட்டதால் முடிவுகள் வருவதற்கும் தாமதமாயிற்று. முடிவுகள் வந்தவுடனே போதிய அவகாசம் கொடுக்கவில்லை என்றுதான் பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை என்று நினைக்கிறேன். எப்போது வந்ததோ ஒரு பத்து நிமிடங்கள் கூட தாமதம் இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் வந்தவுடனேயே பத்திரிகைகளுக்கு அறிவித்தார்கள். அம்மாதிரி போட்டதால் இன்னும் அவகாசம் வேண்டுமென்ற காரணத்தினால் சில பத்திரிகைகள் போடவில்லை. ஆனால், இது தவிர்க்கக் கூடாத வகையில்தான் தாமதம் ஏற்பட்டது. முடிவுகள் வெளி வந்ததும் அந்த சர்டிபிக்கேட் புத்தகங்கள் அனுப்புவதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றுமில்லை. அவர்கள் எவ்வளவுதூரம் விரைவாக போட்டு அனுப்ப முடியுமோ அப்படி அனுப்பியிருந்திருக்கிறார்கள். இதில் கல்லூரியில் சேருவதில் ஏதாவது கஷ்டமிருந்தால், அதைத் தெரிவித்தால் பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்து அவர்களுக்கு அம்மாதிரி தடை இல்லாமல் பின்னால் வருகிற மாணவர்களையும் அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்யக் கூடும். இதற்கு எல்லாம் ஒரு தனிக் கேள்வி கேட்டால் அதைப் பார்த்து விடை அளித்து விட்டு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்**: கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கு நிவாரணம் கிடைக்குமென்று கூறினார்கள். தனிக் கேள்வி போட்டு, ஒரு நாலைந்து நாட்கள் கழித்து இந்த மன்றத்தில் விடை அளித்து, அதற்குப் பின்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணம் கிடைக்குமா என்றால், கிடைக்காது என்றுதான் பொதுவாக நான் கூறுவேன். தர்மபுரி வட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 27, 28 தேதிகளில்தான் புத்தகங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. அதற்குள்ளாக கல்லூரிகளில் மனுப் போட வேண்டிய கடைசி நாளும் கடந்து விட்டது. அதனால் அந்த வட்டாரத்தில் உள்ள மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் விருதுநகருக்கு அனுப்ப வேண்டிய சர்டிபிக்கேட் புத்தகங்கள் தர்மபுரிக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.



2nd August 1965] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

MR. SPEAKER: The time limit of ten days is not statutory. That can be waived if the Government intervenes.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கேள்வி கேட்கவேண்டிய அவசியம் இல்லை. என்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டால் பல்கலைக் கழகத்திற்கு எழுதி அவர்களுக்கு அந்த இடையூறுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யலாம் என்றுதான் சொன்னேன்.

MR. SPEAKER: The hon. Member Sri M. V. Karivengadam can represent to the Hon. Minister for Education today. However this is not a matter for an adjournment motion and hence, I withhold my consent to it.

## III.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS (AMENDMENT) BILL, 1965 [L.A. BILL NO. 15 OF 1965]

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras District Development Councils (Amendment) Bill*, 1965 (L.A. Bill No. 15 of 1965), be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டெவலப்மெண்ட் கௌன்சில், ஜில்லாக்களில் நடைபெறும் ஸ்தாபனம். இது ஒரு சட்டத்தால் அமைக்கப்பட்டது. அந்தச் சட்டத்தில், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்த டெவலப்மெண்ட் கவுன்சில் கூட வேண்டுமென்று இருக்கிறது. சில சமயங்களில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட முடியாமல் போய் இருக்கிறது. முக்கியமான ஒரு காரணத்தை நான் சொல்லலாம். கனம் அங்கத்தினர்கள், சட்டமன்ற அங்கத்தினர்கள் அதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சட்டமன்றம் நடைபெறுகிற போது கூட்டம் போட்டு விடுகிறார்கள் என்ற புகார் சொல்லப்பட்டு வந்தது ஒருக்கால் அது ஒரு காரணமாக இருக்கலாம். மூன்று மாதங்களுக்குள்ளே கூட முடியாமல் போவதற்கு சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு சௌகரியம் இல்லாமல் இருக்கலாம், வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் சட்டப்படி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று இருக்கிறது. அப்படி சட்டப்படி கூடாதது தவறு என்று ஏற்படுகிறது. அப்படி கூடாமல் மூன்று மாதத்திற்கு மேலே நடைபெற்றால் அந்த நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கைகள் என்று சட்டப்படி இருக்கிறது. இதை தவிர்ப்பதற்காகத்தான் இந்தத் திருத்தம்; மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை எடுத்து விடக்கூடிய

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 30th July 1965.

[Sri M. Bhaktavatsalam] [2nd August 1965

திருத்தம். அதையொட்டியே மற்ற பிரிவுகள் இருக்கின்றன. அதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இத்திருத்தம் சட்டப்படி சம்பிரதாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றே தவிர இதனால் முக்கிய நன்மை அந்த மாவட்ட மன்றங்களுக்கோ அல்லது அதன் நடவடிக்கைகளுக்கோ ஏற்படப் போவதில்லை. சட்டத்தில் கவுன்சில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்று இருக்கிறது. குறைந்தபட்சம் அது. நடைமுறையில் எப்படி இருக்கிறது என்றால் வருடத்திற்கு ஆறு முறை, அநேகமாக இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுகிறது. மாதங்கள் கூட நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பிப்ரவரியி லிருந்து டிஸம்பர் வரை. அந்தந்த மாதங்களில் அநேகமாக கூடுகிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம் தேர்தல் ஏற்பட்ட காரணத்தால் இந்த சமயம் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டது. இந்தக் கூட்டங்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டியது சரியானது என்பதுதான் என் அபிப்பிராயம். அதை நடத்தவும் வேண்டும். ஆனால் வருகிற மசோதாவைப் பார்க்கிறபொழுது இந்த மாதிரி ஸ்தாபனங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை எல்லாம் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர அதிகாரங்களை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றம் சட்டப்படி எந்தக் காரியத்தையும் செய்யக்கூடிய மன்றம் அல்ல. இப்போது ஏதோ இந்த திருத்தம் கொண்டு வந்து விடுவதினால் மட்டும் பெரிய பலன் ஒன்றும் இந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டு விடப்போவதில்லை. எந்த தீர்மானங்களுக்கும் உடனடியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதைப் பொருள்படுத்துவதாகவும் தெரியவில்லை. தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அங்கே நிறைவேற்றுகின்ற தீர்மானம் யாரையும் கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானம் அல்ல. சிபாரிசு செய்யக்கூடிய அதிகாரங்கள்தான் இந்த மன்றத்திற்கு இருக்கிறது. அதிலும் குறிப்பிட்ட யோசனைகளைச் சொல்லலாம், ஆனால் அதன்படிதான் அமல் நடத்தவேண்டும் என்ற விதி எதுவும் இல்லை. அப்படியே சிபாரிசுகள்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்ன செய்வது என்பதும் இந்தச் சட்டத்தில் இல்லை. அதற்கு யார் பொறுப்பாளி என்பதும் இதில் சொல்லப்படவில்லை. அதிலும் முக்கியமாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்னென்ன, அவைகளின் மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி இந்த சபையின் மேஜை மீது அறிக்கை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு ஒரு தடவை அப்படி வைக்கவேண்டும் என்று இருந்தும், அப்படி இங்கே வைக்கப்படுகிறதா என்று பார்த்தால் நிலைமை அப்படி இல்லை. ஏதோ எட்டு வருடங்களில் ஒரு தடவை அந்தமாதிரி ஒரு அறிக்கை வைத்ததாக எனக்கு ஞாபகம். ஆகவே, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஒழுங்காக கூட்டப்படவில்லையானால் என்ன செய்வது, அதற்கு



2nd August 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மாற்றம் வேண்டும் என்பதற்காக திருத்தம் கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் முக்கியமாக இந்த ஸ்தாபனத்திற்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட இலாகாவினர் முயலவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குமேல், மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் கேள்வி கேட்கக் கூடிய சந்தர்ப்பம் முன்னால் இருந்து வந்தது. இப்போது, அம்மாதிரி கேள்வி நேரம் என்று தனியாக இருக்கக்கூடாது என்று அதை அரசாங்க உத்தரவின் மூலம் நிறுத்திவிட்டார்கள். இப்போது ஏதாவது தீர்மானங்கள் போட்டு அனுப்பக்கூடிய அதிகாரம்தான் இருக்கிறது. எங்கே ரோடு போட்டிருக்கிறது? முன்னால் தீர்மானம் செய்யப்பட்ட ரோட்டின் நிலைமை என்னவாயிற்று? காலனி கட்டுவதற்காக மனைக்கட்டு வாங்கு கின்ற விஷயம் என்னவாயிற்று? ஓவர்ஹெட் டாங்க் என்ன வாயிற்று? பள்ளிக்கூடம் என்னவாயிற்று? என்றெல்லாம் கேள்வி கேட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விவரங்களை தெரிந்து கொள்வதற்கும், அதில் ஏதாவது காலதாமதம் ஏற்பட்டிருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதை கண்டறிவதற்கும், இவ்விதம் கேட்பதின் மூலமாக அதிகாரிகளுக்கு ஓரளவுக்கு வேலைகளை துரிதமாக நடத்தவேண்டும் என்ற அச்சம் ஏற்படுவதற்கும், ஏதாவது வேலையில் தவறுகள் இருந்தால் அதை மாற்றுவதற்கும் இந்த கேள்வி நேரம் பயன்பட்டு வந்தது. ஏதோ ஒரு நல்ல அம்சமாகவும், அவசியமாகவும் இருந்ததோ அதை எடுத்து விட்டார்கள். இப்போது இந்தத் திருத்தத்தினால் மட்டும் எந்த விதமான பயனும் புதிதாக ஏற்பட்டுவிடப்போவதில்லை. நான் தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திருத்தத்தின் மூலமாக நாம் இந்தச் சட்டத்திற்கு பெரிய பாதுகாப்பை ஒன்றும் தேடிக்கொள்ளப் போவதில்லை. அதற்காக இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு கனம் முதல் அமைச்சர் அவர்களும், பொறுப்பில் இருக்கின்ற அமைச்சர் அவர்களும் மாவட்ட வளர்ச்சி மன்றங் களுக்கு எந்த விதத்தில் இன்னும் கூடுதலான அதிகாரங்களை கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த எட்டு வருட காலமாக மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இயங்கி வருகின்றன. சட்டபூர்வமாக இந்த மன்றங்கள் இயங்கி வந்தாலும் கூட, அது எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் வெறும் பொம்மை போலத்தான் இந்த மன்றம் இயங்கி வருகிறது. ஏதாவது அதிகாரங்கள் இருந்தால்தான் இந்த மன்றத்திற்கு இன்னும் அதிக மதிப்பு ஏற்படும். இப்போது மாதம் ஒரு முறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மெம்பர்கள் எல்லோரும் ஒன்று கூடுவதும், கலக்டர் ஆபீசில் ஏதாவது வேலைகள் இருந்தால் அங்கு வருவதற்குள்ள ஒரு வாய்ப்பும்தான் ஏற்படுகிறதே தவிர உண்மையான பலன் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இந்த ஸ்தாபனம் தேவையா என்று பார்த்தால் நிச்சயம் தேவைப்படுகிறது. ஆனால் அதிக அதிகாரங் களோடு இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டு

கோள். எட்டு வருட காலமாகவுள்ள அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன். என்னென்ன விதத்தில் அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஒரு கமிட்டியையாவது போட்டு, உபயோகமான முறையில் இதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Speaker, Sir, I would like to say a few words on the Bill that is now under discussion before this House. The District Development Councils have been constituted under the Act and the meetings of the Council are held under the Chairmanship of the Collector. There is a feeling that a non-official should be elected to preside over the deliberations of the Council. But it is seen in practice that the Collector as Chairman will be in a better position to provide much information to the members and to carry on the business of the Council properly and to co-ordinate the activities. But I am of the view that at least the Committees that are constituted by the District Development Council could be given some more powers. It is said that they are only advisory bodies. At present, those mittees are not functioning properly. They are not meeting even periodically. Those Committees should meet often to transact business and advise the District Development Council so that the deliberations of the Council which has become unwieldy, are conducted properly. Members of Parliament, Members of the Legislative Assembly and the Council, the Panchayat Union Chairmen and a number of officers are also members of the District Development Council. They sit for one or two hours and they are not able to discharge their responsibilities properly. Almost all matters regarding development are discussed there. They are reviewing the working of the Panchayat Unions and the various developmental activities during the meetings of the District Development Council. There is not much time there. So, the Committees at least may be given opportunity to discuss things in detail and also advise the District Development Council on important matters. They must be given some statutory powers. Now, most of the decisions taken by the Committees are not properly communicated to the District Development Council. The Council meets whenever it pleases and I do not think that the District Development Councils are able to discharge the responsibilities entrusted to them properly. The Collector may therefore be asked to convene the meetings periodically at least once in two months and provide better information to the members who go there with lot of hopes to do so many things for the district.

With these words, Sir, I conclude my speech.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்



திரு. கலியாணசுந்தரம் அவர்கள் முழுக்க முழுக்க மெயின் ஆக்டைப்பற்றி குறிப்பிட்டு அதிலுள்ள குறைபாடுகளைப்பற்றி சொன்னார்கள். இந்த திருத்த மசோதாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை; ஆனால், இதை ஆட்சேபிக்கவில்லை என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்டது மாதிரி, மெயின் ஆக்டில் சில குறைகள் இருக்கின்றன. முக்கியமாக, இந்த டெவலப்மெண்ட் கௌன்சிலுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். இந்த கௌன்சிலில் போடுகின்ற தீர்மானங்களுக்கு என்ன 'எஃபக்ட்' என்று தெரிய முடிவதில்லை. அங்கு நிறைவேற்றப்படுகிற சில தீர்மானங்களுக்கு கலெக்டர் அவர்கள் 'அஷ்யூரன்ஸ்' கொடுக்கிறார்கள். டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்கள் என்னவாயிற்று என்பதை கௌன்சிலின் அடுத்த கூட்டத்தில் சொல்லும்படியான அளவுக்கு ஏதாவது வழிவகை செய்தால் கூட நன்றாக இருக்கும். இப்போது அங்கே நிறைவேற்றப்படுகிற தீர்மானத்தின் எஃபக்ட் என்னவாயிற்று என்று யாருக்கும் தெரிவதில்லை. இவ்விதம் எந்தவிதமான அதிகாரமும் இல்லாத அளவில் ஒரு "ஃபார்ஸ்" மாதிரிதான் நடந்து கொண்டிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் மன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் லோக்கல் நிலைமைகள் நன்றாக தெரியுமாதலால் கீழ்மட்டத்தில் நடைபெற வேண்டிய காரியங்களை அங்கேயே—பஞ்சாயத்து தலைவர்கள், மற்றுமுள்ள மெம்பர்கள் இவர்களே அங்கேயே விவாதித்து முடிவு எடுக்க முடியும், இதன் மூலமாக இங்கேயுள்ள பாரம் ஓரளவுக்கு—அதாவது கீழ்மட்டங்களிலுள்ள பிரச்னைகளைப் பற்றிய பொறுப்பு இங்கே ஓரளவுக்கு குறையும். ஆகையினால், ஓரளவு இப்போது உள்ள டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு அதிகாரங்கள் உள்ள அளவில், பண்ணிய தீர்மானங்களைப் பொறுத்த வரையில் அடுத்த கூட்டத்திலாவது எந்த அளவுக்கு அவைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள், நிறைவேற்றப்படாத காரணம் என்ன என்று விளக்கமாக அரசாங்கத்திலிருந்து பதில் 10-30 a.m.
அனுப்பி அதை கவுன்சில் முன்னால் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது வந்துள்ள அமெண்டிங் பில்லைப் பற்றி அமைச்சர் அவர்கள் இரண்டு விளக்கங்கள் சொன்னார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடவேண்டுமென்ற விதியைத் தளர்த்தவில்லை, கண்டிப்பாக கூட்டவேண்டுமென்ற விதியையும் தளர்த்தவில்லை, அகஸ்மாத்தாகத் தள்ளிப்போடவேண்டிய நிலை ஏற்பட்டால் நிறைவேற்றிய தீர்மானங்கள் கோர்ட் ஆஃப் லாவுக்குப் போய் கூட்டமே செல்லாது, நடவடிக்கைகள் செல்லாது என்று ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முறையில் இந்த ஷரத்து இருக்கிறது. இதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் எவ்வளவோ முயன்றாலும் ஓரளவுக்கு மூன்று மாதங்களுக்குள் இயலாமல் தள்ளிப் போகும் நிலைமைகள் கூட ஏற்படுகின்றன.

ஒரே ஒரு விஷயம். பில்லிலே கடைசியாக நோட்டிஃபிகேஷன்களையெல்லாம் சட்ட சபை முன் வைக்கவேண்டுமென்று

சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி பொர்சின் பேரில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கடைசியில் ஒரு க்ளாஸ் போட்டிருக்கிறார்கள். இப்படி எல்லா ஆக்டிலும் இருக்கிறதா என்று விளக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நோட்டிஃபிகேஷனை வைத்தவுடன் இந்த செஷனிலோ அல்லது அடுத்த செஷனிலோ சபை ரிஜெக்ட் செய்யவோ, மாடிஃபிகேஷன் செய்யவோ செய்தால் சபை அங்கீகாரம் செய்தபடி ஃபோர்ஸுக்கு வரும் என்று இருக்கிறது. இந்த இன்டரக்னத்தில் ஏற்கனவே ரூல் ஃபோர்ஸுக்கு வந்ததாகக் கருதப்பட்டு—உதாரணமாக ரூல் ஃபிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால், ஜூலை மாதத்தில் சபை முன் வைத்து அப்போது அதை சபை ஒத்துக்கொள்ளவில்லையென்றால், ஃபிப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் இந்த 5-6 மாதங்களில் கொண்டுவரப்பட்ட ரூல் அமலில் இருந்து அதன்படி பல காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலும் அவைகள், அந்த ரூலை சட்ட சபை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், காரியங்கள் மாற்றப்படக் கூடாது என்று இருக்கிறது. ரூல் ஏற்படுத்தப்பட்டு காரியம் நடத்தப்பட்டிருந்தால் அந்தக் காரியம் செல்லுவதாக இருக்கும், அதற்கு பூர்ண ஃபோர்ஸ் உண்டு என்ற முறையில் க்ளாஸ் இருக்கிறது. அப்படிப் போட்டால் சட்ட சபையின் அதிகாரத்தை ஓரளவு குறைப்பதாகாதா என்பதற்கு விளக்கம் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" However, any such modification shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification " என்று போடப்பட்டிருக்கிறது. அந்த நடுவில் உள்ள பீரியட்டில் ஃபோர்ஸ் உண்டு, பின்னால் மாற்றி விட்டாலும் கூட, ரூலையே தள்ளி விட்டாலும் கூட என்ற முறையில், காரியங்கள் செய்யப்பட்டிருந்தால் ஃபோர்ஸ் இருக்கும் என்றால் அந்த அளவுக்கு சட்ட மன்றத்தின் அதிகாரத்தைக் குறைப்பதாகாதா, இந்தமாதிரி வேறு ஆக்டில் இருக்கிறதா என்று விளக்கம் சொல்லவேண்டுமென்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. பொ. வடிவேல் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மாவட்ட அபிவிருத்தி மன்றங்களை ஏற்படுத்தியதன் நோக்கமே பெரும்பாலான வேலைகள் ஜில்லா அபிவிருத்தி சம்பந்தப்பட்ட மட்டில் சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் வேலைகளில் பெரும் பகுதியை அங்கேயே முடித்துக்கொள்ள வாய்ப்பும் வசதியும் இருக்கும் என்பதுதான். ஆனால் ஜில்லா அபிவிருத்தி மன்றத்தில் குறிப்பிட்ட சப்ஜெக்ட்டுகள்தான் ஒரு கூட்டத்திற்கு வரும் —அதாவது விவசாயம், கால்நடை, போக்குவரத்து ஆகியவைகள் ஒரு கூட்டத்திற்கு வரும். அடுத்த கூட்டத்தில் தான் மற்ற சப்ஜெக்டுகள் வரும். ஒரு பொருளைப் பற்றி விவாதித்து அடுத்த பொருளை விவாதிக்க மூன்று மாதம் செல்ல வேண்டியிருக்கிறது. முதலில் விவாதித்த பொருளைப் பற்றியே மறுபடியும் விவாதிக்க வேண்டுமென்றால் ஆறு மாதங்கள் கழிந்து விடுகின்றன. இப்படி வருஷத்தில் பாதி நாள் போய் விடுகிறது. சட்டமன்றங்கள் கூடு



வதனால்தான் அந்த சமயங்களில் கூட்ட முடியாமல் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன, அது ஒரு காரணம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சட்ட மன்றம் கூடுவதில் பட்ஜெட் செஷனின்போதுதான் ஒரு மாதம் செஷன் இருக்கிறது. அப்போதுதான் தகராறு இருக்கக் கூடும். மற்ற நாட்களில் 15 நாட்களுக்கு முன்பாகவே சட்ட மன்றம் எப்போது கூடுகிறது என்று தெரிந்து விடுகிறது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்பதே மாதத்திற்கு ஒரு முறை என்று இருக்கவேண்டுமென்று கருதுகிற நேரத்தில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டுமென்பதை மாற்றி விடுவது சரியல்ல என்று அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

N65-30-6

சட்ட மன்ற அங்கத்தினர்களுடைய பாதி வேலைகள் ஜில்லா அபிவிருத்தி மன்றத்திலேயே முடிந்து விடுகிற காரணத்தினால் சட்ட மன்றத்தில் கேள்விகள் கேட்பது கூடக் குறைந்து விடுகிறது. அதனால் சட்ட மன்றத்தின் வேலைகள் கூட குறைந்து விடுகிறது. ஆகையினால் ஜில்லா அபிவிருத்தி மன்றங்களில் அரை மணி நேரம் கேள்வி நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆந்திர மாநிலத்திலெல்லாம் நாண்-அஃபிஷியல்ஸ்தான் சேர்மனாக இருப்பதாக அறிகிறோம். அம்மாதிரி இங்கும் சட்டத்தைத் திருத்தி நாண்-அஃபிஷியல்ஸ் தலைவராக இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மூன்று மாதங்களுக்கு என்று இருப்பதை இரண்டு மாதத்திற்குள் என்று மாற்றவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

64914

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் நோக்கம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட முடியாவிட்டால் நடவடிக்கைகள் செல்லுபடியாகக் கூடாது என்பதுதான். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டியதில்லை என்பது அல்ல. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுவது அனுஷ்டிக்கப்பட்டுத்தான் வரும். எதிர்காலத்தில் அந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்படலாம் என்றுதான் நான் குறிப்பிட்டேன். இப்போது இந்தத் திருத்தம் வந்ததன் நோக்கம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பஞ்சாயத்து யூனியன் தேர்தல் எல்லாம் தள்ளி வைக்கப்பட்டது. அதனால் மூன்று மாதங்களுக்குள் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட முடியாமல் போய் விட்டது. அவ்வாறு ஒரு தடை இருக்கக் கூடாது என்றுதான் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திருத்தத்திலுள்ள நோட்டிஃபிகேஷன் பற்றி கனம் உறுப்பினர் திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள். எதுவும் இந்த மன்றம் செய்கிறது. மன்றத்தின் அதிகாரம் எடுக்கப்படுகிறது என்று சொன்னால் அதில் பொருள் இல்லை. எது வேண்டுமென்றாலும் சட்டம் செய்யலாம், சட்டத்தின் கீழ் விதிகள் செய்ய சட்டம் செய்யலாம். அதனால் மன்றத்தில் அதிகாரம் பாதிக்கப்படுகிறது என்று கூறுவது சரியல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [2nd August 1965

பொதுவாக, டெவலப்மெண்ட் கவுன்சில் சட்டத்திலுள்ள ஷரத்துக்களை மாற்றி அமைக்கவேண்டுமென்று சொல்லுவதெல்லாம் இந்தத் திருத்த மசோதாவில் வராது இருந்தாலும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்று கேள்வி நேரம் அனுமதிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். இது ஒரு ஆலோசனைக் குழுவாகத்தான் இருக்கிறது. அதிலும் கனம் அங்கத்தினர் திரு. வடிவேல் அவர்கள் சொன்னதுதான் முற்றிலும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாக இல்லை. அங்கு கேள்வி கேட்டால் இங்கு கேள்வி நேரம் குறைந்து போய்விடும் என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த மன்றம்தான் முக்கியம். இந்த மன்றத்தின் வேலையைப் பாதிக்கும் அளவில் அப்படி ஒரு சட்டம் இருந்து, அபிவிருத்திக் கவுன்ஸிலில் கேட்டால் போதும் என்பது சரியல்ல. இங்கு கேட்பதுதான் முக்கியம். அது நிர்வாகக் குழு அல்ல. ஆலோசனைக் குழுவாகத்தான் அது இருக்கிறது. விவரங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆனால், அதற்கு ஒரு கேள்வி நேரம் என்பது முறை அல்ல என்ற நோக்கத்தோடுதான் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதே மாதிரி மசோதா கொண்டு வந்த போது விவாதிக்கப்பட்டது. இது ஒரு ஆலோசனைக் குழு, அந்தக் குழுவில் என்னென்ன முடிவுகள் செய்யப்படுகின்றன என்பதை ஏற்று நடவடிக்கைகள் எடுக்க கலெக்டர் அவர்கள் சேர்மனாக இருப்பது தான் நல்லது. நிர்வாகத்தில் அதிகாரியாக இருக்கிறவர் அவர். நான்-அஃபிஷியல்ஸ் ப்ரிஸைட் செய்தால் அவர்கள் ப்ரிஸைட் செய்வதோடு சரி. கலெக்டர் என்றால் அப்படி அல்ல. சில முடிவுகள், தீர்மானங்கள் செய்தால் மேற் கொண்டு கலெக்டர் கவனிக்க இடம் இருக்கும். மேலும் இந்த டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் நிறைவேற்றப்படுகிற முடிவுகள், சிபாரிசுகள் கன்ஸல்டேட்டிவ் கமிட்டி, மாநில ஆலோசனைக் குழுவிற்கு வருகிறது. அதிலே கூட இவையெல்லாம் விவாதிக்கப்படுகின்றன. அப்போதும் பிரதிநிதிகள் வருகிறார்கள், ஜில்லா அதிகாரிகள் வருகிறார்கள், அரசாங்கத்தின் சார்பில் இருக்கிறவர்களும் இருக்கிறார்கள். இந்த அமைப்பே சிபாரிசு செய்வது தான். கலெக்டரே ஏற்றுக்கொண்டால் நிறைவேற்றி விடலாம். ஜில்லா அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் அரசாங்கத்திற்கு அனுப்பப்படவேண்டும், அதற்கு மேல் அரசாங்கம் பார்த்து முடிவுசெய்யவேண்டுமென்ற முறையில்தான் இந்த அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எந்த நோக்கத்தோடு இந்த அமைப்பு, ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கம் சரியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று தான் நான் சொல்லுகிறேன். கனம் அங்கத்தினர்கள் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்று சொல்வதற்கில்லை. ரொம்ப அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், டெவலப்மெண்டு கவுன்ஸில் கூட்டம் என்றால், ரொம்ப எதிர்பார்த்து, மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். டெவலப்மென்ட் கவுன்ஸில் அங்கத்தினர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்வதற்காக நான் பாராட்டுகிறேன். இந்த மசோதாவை மன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.



2nd August 1965]

MR. SPEAKER : The question is—

" That the Madras District Development Councils (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 15 of 1965), be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras District Development Councils (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 15 of 1965), be passed. "

MR. SPEAKER : The question is—

" That the Madras District Development Councils (Amendment) Bill, 1965 (L.A. Bill No. 15 of 1965), be passed."

The motion was put and carried and the Bill was passed.

## IV.—ANNOUNCEMENT.

### THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965.

## III.—GOVERNMENT BILLS—*cont.*

### (2) THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1965 [L.A. BILL NO. 16 OF 1965.]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move— . . .

SRI M. KALYANASUNDARAM : On a point of Order, Sir

MR. SPEAKER : Let the Hon. Chief Minister move his motion.

MR. SPEAKER : Let the Hon. Chief Minister move his motion and make a brief speech?

MR. SPEAKER : All right.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the Madras City Municipal Corporation (Amendment) Bill*, 1965 (L.A. Bill No. 16 of 1965), be taken into consideration. "

* Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 20th July 1965

[2nd August 1965

SRI M. KALYANASUNDARAM : Now, I think I can raise my point of order, Sir.

MR. SPEAKER : Nothing is going to be lost if the hon. Member were to raise his point of order after the Hon. Chief Minister's speech.

SRI M. KALYANASUNDARAM : My point of order is with regard to the motion which the Hon. Chief Minister has just moved.

MR. SPEAKER : The Hon. Chief Minister requested me permission to move the motion and make a brief speech. I have permitted him to do so. After the Hon. Chief Minister's speech, the hon. Member Sri M. Kalyanasundaram can raise his point of order.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, நகரமன்றத்தைப்பற்றிய பழைய சட்டம் ஒன்று இருந்தது. அது இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருத்தி அமைக்கப்பட்டது. அப்படி திருத்தி அமைக்கப்பட்ட சட்டத்திற்கு இப்பொழுது ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேறு சில திருத்தங்களும் வேண்டியிருக்கிறது என்ற ஆலோசனை நகர மன்ற உறுப்பினர்களாலும் கூறப்பட்டிருக்கிறது. அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது. அவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. ஆனால், நகர மன்றத்தைப் பற்றிய சட்டத்தை முற்றிலும் திருத்துவது என்றால், அதற்கு இன்னும் கொஞ்ச காலதாமதம் ஏற்படும். அவைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இப்பொழுது உடனடியாகச் செய்யவேண்டிய திருத்தங்கள் தயாரிக்கப்பட்ட பிறகு, மற்ற திருத்தங்களெல்லாம் இறுதியாகப் பரிசீலனை செய்யப்பட்டு முடியும் வரையிலே காத்திருக்கவேண்டாம் என்று கருதித் தான் இப்பொழுது இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இந்த மசோதாவின் கீழ் உத்தியோகஸ்தர்களை நியமிக்கின்ற விஷயம் பற்றி ஒரு முக்கியமான திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நகரமன்ற உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்திலே, ஓரளவுக்கு மாநில அரசாங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் மாதிரி அவர்களையும் 'ப்ரொவின்ஷியலைஸ்' ஆக்குவது என்பதுதான் நோக்கம். 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்வது என்றால் சில உத்தியோகஸ்தர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கேட்டு நியமனம் செய்வது என்பது ஒன்று, மற்றொன்று நகரமன்றத்தில் சில தலைமை அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள், ஆனால், அவர்களை அரசாங்கம் நியமிப்பதில்லை. அரசாங்கம் ஒரு 'பானலை' ஒரு குழுவைத் தெரிவிக்கவேண்டும். அந்தக் குழுவிலிருந்து கார்ப்பரேஷன் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலைமை இருக்கிறது இப்பொழுது. அப்படியில்லாமல் இந்தத் தலைமை அதிகாரிகளை அரசாங்கமே நியமிப்பது என்பது ஒரு திருத்தம். ஒரு குழு ஒன்று அரசாங்கம் தெரிவித்து, அந்தக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற அந்த வகையிலே கொஞ்ச காலத்திற்கு



2nd August 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

முன்பு ஒரு முக்கியமான தலைமை அதிகாரியை நியமிப்பதிலே ரொம்பக் கால தாமதம் ஏற்பட்டது என்று புகார் கூட இருந்தது. ஆகவே, நகர மன்றத் தலைமை அதிகாரிகளை அரசாங்கமே நியமிப்பது என்பது மற்றொரு முக்கியமான திருத்தம்.

கமிஷனரை நியமிக்கும் விஷயத்தில் அரசாங்கம்தான் கமிஷனரை நியமிக்கிறது. அரசாங்கம் ஒரு அரசாங்க அதிகாரியைக் கமிஷனராக நியமித்துவிட்டால், இப்பொழுது இருக்கிற சட்டத்தில் ஒரு ஐயம் இருக்கிறது. நகர மன்றத்திற்கு சர்க்கார் அதிகாரி ஒருவர் கமிஷனராக நியமிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகவேண்டும், அல்லது அவர்கள் தேவையில்லை என்று நகர மன்றம் தீர்மானம் செய்யவேண்டும். அதுவரையிலே அவரை மாற்ற முடியாது, எடுக்க முடியாது என்ற ஒரு நிலைமை இருக்கிறது. ஒரு அதிகாரிக்குப் பதவி உயர்வு ஏற்படலாம். அரசாங்கம் கமிஷனராக அளித்திருக்கிற அதிகாரிக்கு வேறு இடத்தில் மாற்றம் இருக்கலாம். அல்லது அந்த அதிகாரியே அந்த வேலை வேண்டாம் என்று வேறு இடத்திற்குப் போவதற்கு பிரியப்படலாம். இதற்கெல்லாம் இப்பொழுது சட்டத்தில் இடமில்லை. ஆகவே, அதற்கு இடம் அளிக்கும் வகையிலே முக்கியமான ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்றொன்று 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்வது என்றால், எந்தெந்த அதிகாரிகளை 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்வது என்பதற்கெல்லாம், 'ப்ரொவின்ஷியலைஸ்' செய்வதை ஒட்டிய சில விதிகள் இருக்கின்றன.

இன்னொரு முக்கியமான திருத்தம் என்னவென்றால், நகர மன்றத்தை 'சூபர்ஸீட்' செய்வதற்கோ அல்லது கலைப்பதற்கோ இப்பொழுது இருக்கிற சட்டத்தில் அதிகாரம் இல்லை. மாநில முனிஸிபாலிடிகள் சட்டத்தில் அந்த அதிகாரம் இருக்கிறது. வேறு கார்ப்பரேஷன்களில், மற்ற நகரங்களில் உள்ள கார்ப்பரேஷன் சட்டத்தில் சிலவற்றில் அந்த அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் இல்லாதது ஒரு குறை. அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் வேண்டும் என்று கருதப்படுகிறது. தகுந்த காரணங்கள் இருந்தால், நகர மன்றத்தைச் சமாதானம் கேட்டு, அந்த சமாதானம் அரசாங்கத்திற்குத் திருப்தி இல்லையென்றால், நகர மன்றத்தை "சூபர்ஸீட்" செய்வதற்கோ அல்லது கலைப்பதற்கோ அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கக்கூடிய வகையிலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வேறு சில திருத்தங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவாக எடுத்துக்கொண்டு விவாதிக்கும்பொழுது இந்தத் திருத்தங்களைப்பற்றியெல்லாம் கவனிக்கலாம். நான் முதலில் கொடுத்ததை மாற்றி, திருத்தமாக இல்லை, வாசகம் சரியாக இல்லையென்று 'ஸப்ஸ்டிட்டியூட்டாகவே' வேறு வாசகத்தில் இந்தப் பிரிவைக் கொடுத்திருக்கிறேன். கனம் உறுப்பினர்களும் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பிரிவாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது, இந்த விவரங்களையெல்லாம் விவாதிக்கலாம் என்று கூறி, கனம் அங்கத்தினர்கள் இந்தப் பிரேரபணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவையே பிரேரேபிக்கக்கூடாது என்பது என்னுடைய ஆட்சேபணை. தயவு செய்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா ஜூலை 31-ம் தேதியன்று இந்தச் சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது, மசோதா வருவதாக அறிவிக்கப்பட்டது. 31-ம் தேதி மாலை இந்த மசோதாவின் நகல் எங்கள் கைக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகுதான் நாங்கள் இந்த மசோதாவைப் பார்க்க முடிந்தது, இதில் என்ன விவரம் இருக்கிறது என்று பார்க்க முடிந்தது. அந்தக் கஷ்டம் இருப்பது இருக்கட்டும். சட்டப்படி, 95-வது விதியின்படி ஒரு மசோதா வெளியிடப்பட்டு, பிரசுரிக்கப்பட்டு, 5 தினங்களுக்குப் பிறகுதான் அந்த மசோதாவின் பொறுப்பை வகிக்கக்கூடிய அமைச்சர் அந்த மசோதாவை இந்தச் சபையில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற யோசனையைக் கொடுக்க முடியும். கெஜட்படி ஜூலை 30-ம் தேதி என்று வைத்துக்கொண்டாலும் கூட, 31, 1, 2-ஆக மூன்று தினங்கள்தான் ஆகிறது. ஆனால், சபாநாயகருக்கு அதிகாரம் இருக்கிறது. அஜெண்டாவிலே சேர்ந்திருப்பதால், அதிலே சேர்க்கலாம் என்ற அபிப்பிராயம் சபாநாயகர் அவர்களுக்கும் இருக்கிறது என்று தான் அர்த்தம். இதை நான் 'குவெஸ்சின்' பண்ணவில்லை, ஆட்சேபிக்கவில்லை. சபாநாயகர் அவர்களுக்கு இந்தச் சபை 138-வது பிரிவின்படி கொடுத்திருக்கக்கூடிய அதிகாரம் எந்தச் என்றுதான் அர்த்தம். இதை நான் 'குவெஸ்சின்' பண்ணவில்லை, என்பதல்ல, வேண்டுமானால், விசேஷ சந்தர்ப்பங்களில் நோட்டீஸை 'வெய்வ்' பண்ணலாம், சில சமயங்களில் ஏதாவது சங்கடம் ஏற்படுமானால், அப்பொழுது சபாநாயகர் அவர்கள் 'நோட்டீஸை' 'வெய்வ்' பண்ணலாம்.

MR. SPEAKER: So the point of order is against the Speaker then?

SRI M. KALYANASUNDARAM: No, Sir, it is against the department concerned and the Hon. Minister in charge of the same.

இன்னொரு சங்கடம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் சொல்லுகிறார்கள், இன்னின்ன மசோதாக்கள் வரும் என்று. அந்த நேரத்தில் இன்னின்ன மசோதாக்கள் என்று பெயர் மட்டும் தெரியும். அவற்றின் விவரங்கள் தெரிவதில்லை. இப்பொழுது பார்த்தால் இனி பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலும் நாங்கள் உஷாராக இருக்க வேண்டும்போல் இருக்கிறது. ஐந்து நாள் அவகாசம் கூடக் கொடுக்க முடியாத அளவுக்கு இந்த மசோதாவிற்கு என்ன அவசரம்? அங்கத்தினர்களுக்கு, ஸைக்ளோஸ்டைல் செய்த திருத்தம் வருகிறது, மசோதாவில் சட்டத்தின் ஜீவநாடியான ஒரு கிளாஸ் மாறுதலைப் பற்றி. அவசரம் அவசரமாகக் கொண்டுவந்து, சபையில் அனுமதிக்க வேண்டும் என்கிற அளவுக்கு சபாநாயகருக்கும் சங்கடம் உண்டாக்கி . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'சபாநாயகர் அவர்களுக்கு சங்கடம்' என்பதை நான் ஆட்சேபிக்கிறேன். அது ரொம்பத் தவறு. விதிவிலக்குச் செய்யத் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.



அது தவறு என்று சொல்வதற்கும் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படித் தாங்கள் முடியாது என்று சொன்னாலும் நாங்கள் தவறாக நினைக்க மாட்டோம். தங்களுக்கு எந்தவிதமான சங்கடத்தையும் உண்டாக்க மாட்டோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** காலையிலிருந்தே கனம் முதல் அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் திரித்துத்திரித்தே கூறுகிறார்கள், ஏனோ தெரியவில்லை. அவ்விதம் திரித்துக் கூறாமல் இருக்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது போகட்டும்.

இந்த மசோதாவை அப்படி அவசரமாகக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன? ஐந்து நாள் அவகாசம் கூடக் கொடுக்க முடியாமல், நாளைக்கே ஏதாவது ரூபர்ஸீட் செய்யப் போகிறார்களா? அல்லது ப்ரொவின்ஷியலைஸ் செய்து யாராவது அதிகாரிகளை மாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறதா? நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று இருப்பது என்ன வெறும் சம்பிரதாயம் தானா? சட்டையைக் கழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டுவது போல, இந்த முறை இருக்கிறது சரியாகாது. அங்கத்தினர்களுக்கு அவகாசம் வேண்டாமா? அசல் சட்டம் கிடைத்து, அதில் என்னென்ன மாறுதல் செய்யப் போகிறார்கள் என்று பரிசிலனை செய்து பார்க்க வேண்டாமா? அதன் பிறகு அங்கத்தினர்கள், கருத்து என்ன என்று புரிந்து கொண்டு பேசவேண்டாமா? ஆகவே, இதற்கெல்லாம் அவகாசம் இல்லாமல் செய்யவேண்டிய அவசியம் என்ன? 31-ம் தேதி இரவு தான் மசோதா அங்கத்தினர்கள் கைக்கு வருகிறது. நேற்றையதினம் ஞாயிற்றுக் கிழமை. இருந்தாலும் நான் எவ்வளவோ சிரமப்பட்டு, அசல் சட்டத்தை எடுக்க வேண்டியிருந்தது. தற்செயலாகச் சட்டசபை அலுவலக அதிகாரிகள் வந்திருந்தார்கள், அசல் சட்டத்தை எடுக்க முடிந்தது. இப்படி அவசரப் பட்டுச் செய்வது முறையா, இது அவசியம்தானா என்பதைத்தான் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

மசோதாவைத் தயாரித்திருப்பதே மிக மிக அவசரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. தீர்க்கமான ஆலோசனைக்குப்பிறகு செய்யப் பட்டதாக இல்லை. அச்சடிக்கக் கூட நேரம் இல்லாமல், ஸைக்ளோஸ்டைல் அடித்து வருகிறது. ஸைக்ளோஸ்டைல் அடித்த திருத்தம் முன்னால் வருகிறது, மசோதாவின் நகல் பின்னால் வருகிறது, இப்படி இந்த மசோதாவைச் செய்வது நியாயம்தானா? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றுதான் நான் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். நம் சபை நடவடிக்கை சம்பந்தப்பட்டவரை எந்த இலாகாவும் அதிகமாக மதிக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. எல்லா இலாகாவும்தான் அலட்சியப் படுத்துகிறார்கள் என்கிற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. தங்களுக்கு வெய்வ் செய்ய அதிகாரம் இருக்கிறது. அதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆதலால் தான், தங்கள் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு, திருத்தங்கள் கொடுத்துவிட்டு இந்த ஒழுங்குப்

பிரச்சினையைக் கிளப்புகிறேன். இந்த விவாதத்தில் கலந்து கொள்ள விரும்பவில்லை என்றால், விரும்பவில்லை என்று சொல்லி விட்டு வெளியே போகலாம். அப்படிச் செய்யவில்லை. இது ஒரு முக்கியமான விஷயம், இதை சபாநாயகர் அவர்கள் கவனிக்க வேண்டும், அமைச்சர் அவர்களும் கவனிக்க வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்பாக காலதாமதம் பற்றிய பிரச்சினையில் தாங்கள் தக்க முடிவைக் கொடுத்திருக்கிறீர்கள். இதிலும் தக்க ஒரு முடிவைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் அங்கத்தினர் எழுப்பியிருக்கும் ஒழுங்குப் பிரச்சினைபற்றி மட்டும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவை எடுத்துக் கொள்வது பற்றி முடிவு கூறவேண்டியது தாங்கள். மேலும் இது பற்றி பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை கனம் அங்கத்தினர் அவர்களும் அறிவார்கள். இல்லையென்றிருந்தால் இரண்டாந்தேதிக்கு வேறு விஷயம் எடுத்திருக்கலாம். நான்காவது திட்டம் பற்றி விவாதம் நடத்தியிருக்கலாம், சப்ளிமெண்டரி டிமாண்டை, துணை மானியக் கோரிக்கைகளை மூன்றும் தேதிக்குப் பதிலாக இரண்டாந்தேதி வைத்துக் கொள்ளலாம். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலும் இந்த மசோதாவைப் பற்றி முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு தங்கள் அனுமதியின் பேரில் இந்த மசோதா எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஆகவே, இதில் ஒழுங்குப் பிரச்சினைக்கு ஒன்றும் இல்லை என்று தெரிவிக்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : கனம் முதல் அமைச்சர் கூறிய பிறகு வேறொரு விஷயம் தோன்றுகிறது. இன்றைய நிகழ்ச்சிக் குறிப்பைப் பார்க்கிற வரையில் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இன்னும் ஒரு வார்த்தை சொல்ல மறந்து விட்டேன். 31-ம் தேதி இரவுதான் மசோதா நகல் வந்தது; திருத்தம் முன்னால் வந்தது, மசோதா பின்னால் வந்தது என்பதும் சரியில்லை. நான் விசாரித்துத் தெரிந்து கொண்டேன், இங்கே மன்றம் நடந்து கொண்டிருக்கும் போது கொடுக்கப் பட்டது என்று.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : சார், இன்றைய தினம் நிகழ்ச்சிக் குறிப்பு வந்தபிறகுதான் இந்த மசோதா வருகிறது என்று தெரிந்தது. முதலில் மின்சார அமைச்சர் பதில், அதன் பிறகு நேரம் இருந்தால் அரசாங்க மசோதா எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்திருந்தோம். இதிலிருந்து என்ன விளைகிறது என்றால், இனி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் மசோதாக்களைப் பார்த்த பிறகுதான், அவற்றைக் குறித்து ஆலோசிக்க வேண்டும் என்கிற நிலைமை ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமைச்சர் கூறுகிற விளக்கத்தோடு, சரி, சாதாரண மசோதா என்று ஒத்துக் கொள்ளுகிறோம். என்னென்ன முக்கியத்துவம் என்று தெரியவில்லை. சரி, சேர்த்துக் கொள்ளட்டும் என்று வைத்துக்கொள்ளுகிறோம்.



இன்னொன்று, இன்றைய தினம் முதல் முடிவுப்படி மின்சார போர்டு பட்ஜெட் மீது நடந்த விவாதத்திற்கு கனம் அமைச்சர் பதில் என்றுதான் நிகழ்ச்சிக் குறிப்பைப் பார்க்கிறவரை நினைத்திருந்தேன். பின்னால் இதைப் பார்த்தும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டேன், அவர்கள் கலந்து கொண்டார்களா என்று. அவர்கள் கலந்து கொண்டார்கள் என்று சொன்னார்கள். இப்படித் திடீரென்று மாறுதல் செய்யும் போது என்னைக் கலந்து ஆலோசிக்காவிட்டாலும், தகவலாவது தெரிவிக்கலாம். அது போகட்டும், அவசரமான மசோதா, முக்கியமான மசோதா என்றால் எந்த நிமிஷமும் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இடையூறாக இருக்கப் போவதில்லை. ஆனால், இது சாதாரணமாக வரக் கூடிய மசோதா, ஜூன் 30-ம் தேதியே தெரியும், ஜூலை 27-ம் தேதி சபை கூடப் போகிறது என்று. மசோதாவைத் தயாரித்துச் சட்ட சபைக் கூட்டத்திற்கு முன்னதாகவே அனுப்பியிருக்கலாம். இலாகா அதைச் செய்யவில்லை. முன்பு 7 நாட்கள் என்று இருந்ததை இப்பொழுது 5 நாட்கள் என்று குறைத்திருக்கிறோம். இதையும் நாம் கடைப்பிடிப்பதில்லை என்றால் அது எப்படிச் சரியாகும்? மெம்பர்களுடைய கஷ்டத்தையும் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், இருட்டறையில் வைத்துக் கொண்டு வோட்டுப் போடுங்கள் என்று சொல்லக் கூடிய சங்கடம்தான் உண்டாகிறது. ஏதோ தங்களுக்குச் சங்கடம் உண்டாக்குவதற்காக விவாதம் செய்வதாகக் கொள்ளக் கூடாது. மெம்பர்களுடைய உரிமை பாதுகாக்கப்படவேண்டும், மெம்பர்களுக்கு அசல் சட்டம் கிடைக்க வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்குத்தான் குறைந்தபட்சம் 5 நாட்களாவது இருக்கவேண்டும். மெம்பர்களுக்கு என்ன செக்ரடரியா இருக்கிறார்கள்? இந்தத் திருத்தங்களைத் தயார் செய்யுங்கள் என்று சொல்ல யார் இருக்கிறார்கள்? மெம்பர்களே தானே செய்து கொள்ளவேண்டும்? ஆகையினால், இனியாவது இந்த முறையை அமல் நடத்தவேண்டும், இலாகாக்களுக்குக் மசோதாக்களைத் தயாரிக்கும் முன்னதாகவே அங்கத்தினர்களுக்குக் கொடுக்க உத்தரவுகள் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் மெம்பர்களுடைய கஷ்டத்தைக் கவனிப்ப 11.00 a.m.
தில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்** : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய செயல்முறைப் பரிந்துரைக் குழுவில், முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்படுகிற சில மசோதாக்கள் இன்று கொண்டுவரப்படுவது என்று முடிவு செய்யப்பட்டது. முதலிலே, இன்று மின்சாரத் துறை பற்றி தொழில் அமைச்சர் அவர்கள் பதில் உரை தருவார் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் மின்சாரத் துறை பற்றிய உரைக்குப் பதில் தருவது என்றும் . . .

**கனம் சபாநாயகர்** : எஞ்சி இருக்கிற நேரத்தில் மசோதாக்கள் கொண்டுவரலாம் என்றும் இருக்கிறது.

[2nd August 1965

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த மசோதாக்கள் வருவது என்பதற்குத் தெளிவான குறிப்பு ஒன்றும் தரப்படவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிஸினஸ் அட்வைஸரி கமிட்டித் தீர்மானம் இருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இன்று நடைபெறுகிற மின்சாரத் துறை பற்றிய விவாதத்தைச் செவ்வாய்க் கிழமை வைத்துக்கொள்ளலாம். இன்று என்ன என்ன மசோதாக்கள் வரும் என்பதற்கான தெளிவுரை அன்று தரப்படவில்லை என்ற விளக்கத்தை மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Hereafter the parties concerned may sit together and consult each other with regard to the consideration of any Bill or any other matter. I agree that what the hon. Member Sri M. Kalyanasundaram feels, is right. His point is that Members must have sufficient time to go through the Bills and that the Departments should have given the Bill earlier. But nothing has been done against the rules in this case. Therefore, there is no point of order. However, I do agree that the convenience of all the hon. Members must be taken into consideration.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தை ஒத்தி போடுவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. இன்று இதோடு இந்த விவாதத்தை ஒத்திபோட்டுவிட்டு, நாளை மறுதினம், அதாவது 4-ம் தேதி, இதை முதல் 'ஸப்ஜெக்ட்' ஆக எடுத்துக் கொள்ளலாம். 4-ம் தேதியன்று நான்காவது ஐந்தாண்டு திட்டம்பற்றிய விவாதம் தொடங்குவது என்று இருந்தது. 4-ந் தேதிக்குப் பதிலாக அதை 6-ந் தேதி தொடங்கலாம். 5-ந் தேதி 'நான்-அபிஷியல்' தினம். 6, 7, 9 தேதிகளில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாதம் நடக்கும் 10, 11 தேதிகளில் வேறு 'அபிஷியல்' மசோதாக்கள் இருக்கும். ஆகையால், 4-ந் தேதி முதல் ஸப்ஜெக்ட்டாக இந்த மசோதாவை எடுத்துக் கொள்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. இன்றைய விவாதத்தை இதோடு நிறுத்திவிட்டு, தொடர்ந்து 4-ம் தேதி இதை எடுத்துக் கொள்வதாயிருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னையைப் பயன்படுத்திக்கொண்டு வேறொரு அனுகூலத்தைப் பெற இந்த மசோதாவை 4-ம் தேதி நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "வயிற்றைக் கிழித்துக் காட்டினால் கூட ஜாலம் என்று சொல்வார்களானால் நான் என்ன தான் செய்ய முடியும் ?" என்று ஒரு பெரும் தலைவர் சொல்வதுண்டு. அது தான் எனக்கு நினைவிற்கு வருகிறது

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வயிற்றைக் கிழித்துக் கொண்டும் உயிரோடு ஒருவர் இருக்கமுடியுமானால் அதை ஜாலம் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது என்னுடைய திருத்தத்



2nd August 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

திற்கு வலு தேடுவதற்குத்தான் நான் இந்த ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டுவந்தது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட ஒப்புக்கொள்ளட்டும்.

MR. SPEAKER : Even on the 4th, the hon. Member will not be prevented from moving an amendment to refer the Bill to a Select Committee or a Joint Select Committee. It is not for that purpose this Bill is suggested to be postponed to the 4th August. If the hon. Member wants to go through the Bill again and give more amendments, he can do so. It does not mean that the hon. Member loses his right to bring forward amendments for the purpose of referring the Bill to a Select Committee or a Joint Select Committee or for eliciting public opinion.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் இங்கே எடுத்துரைக்கப்பட்ட அத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் இதற்கு அவகாசம் கொடுக்கும் வகையில், இந்த மசோதாவை நன்றாகப் படித்துப் பார்த்து வேறு பல திருத்தங்கள் கொண்டுவருவதற்கு வாய்ப்புத் தருவதற்காக இதை 4-ந் தேதி எடுத்துக் கொள்ளலாம் என்று கூறும் காரணத்தால், இதை 4-ந் தேதியன்று வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு 6, 7, 9 ஆகிய மூன்று நாட்களிலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலைப்பற்றிய விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். அந்த வகையில் மாற்றுவதற்குத் தாங்கள் முயற்சிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Yes.

**திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இனி மேலும் திருத்தங்கள் கொடுப்பதற்கு அனுமதி கொடுப்பதோடு கூட, இந்த மசோதா 4-ந் தேதிக்குத் தள்ளப்படுமானால் அதனால் விவாதங்கள் செய்வதற்குரிய நேரம் அல்லது நாள் குறையுமா, குறையாதா என்பதையும் தெரிவிக்கவேண்டும். இப்பொழுது இருக்கிற நிலையிலே பார்க்கிறபோது, விவாதத்திற்குரிய நாள் குறையும் என்று எண்ணத்தோன்றுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிர்ப்பந்த நிலையில், சட்டசபையினுடைய தொடரை நீட்டுவதற்குத் தேவை இருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகையால், நீட்டுவதற்கு இடம் உண்டா ?

MR. SPEAKER : I do not think it is necessary.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூட்டம் ஆகஸ்டு 11-ந் தேதி வரையில் நடைபெறுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விவாதத்திற்கே இன்னும் அதிக அவகாசம் வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் கருதினால், இதை 4-ந் தேதிக்கு ஒத்திவைத்துவிட்டு அன்று எடுத்துக் கொள்ளலாம். அப்படியானால், 12-ந் தேதி வரை கூட்டத் தொடரை நீட்டிக்கொள்ளலாம். ஆனால், 12-ந் தேதி 'நான்-அபிஷியல்' தினமாக இருக்கிறது. 12-ந் தேதியன்று 'நான்-அபிஷியல் பிசினஸ்'க்குப் பதிலாக 'அபிஷியல் பிசினஸ்' வைத்துக்கொள்வதாக இருந்தால், மற்ற மசோதாக்கள் பற்றிய விவாதங்களை வைத்துக்கொள்ள சௌகரியமாக இருக்கும்.

**திரு. சா. கணேசன் :** அதற்குப் பிறகு செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிற நிலை ஏற்பட்டால்.

MR. SPEAKER : It depends on the vote of the House.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாவித்திரி வரம் கேட்கிற மாதிரி கேட்டுப் பயன் இல்லை. செலக்ட் கமிட்டி பிரச்னை வரவில்லை. விவாதத்திற்கு அவகாசம் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER : We can postpone consideration of the Bill to the 4th instant. If hon. Members want, we can continue the discussion on the 5th also and have the non-official day on the 12th instead of on the 5th.

**திரு. கே. ஏ. மதியழகன் :** 5-ந் தேதி நான்-அபிஷியல் பிஸினஸுக்கு உரிய நாள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 5-ந் தேதி நான்-அபிஷியல் தினமாக இருக்கட்டும். 12-ந் தேதி அபிஷியல் பிஸினஸுக்காக இருக்கட்டும். கனம் அங்கத்தினருடைய தீர்மானம் கூட இருக்கிறது. அதை 5-ந் தேதியன்று வைத்துக்கொள்ளலாம். 12-ந் தேதியன்று 'அபிஷியல் பிஸினஸ்' வைத்துக்கொள்வதாயிருந்தால், 11-ந் தேதியோடு கூட்டத்தை ஒத்தி வைக்காமல், 12-ந் தேதி வரையிலும் கூட்டத் தொடரை வைத்துக் கொள்ளலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, 4-ந் தேதி இந்த மசோதாவை எடுத்துக்கொண்டு 5-ந் தேதி எப்போதும் போல் உத்தியோகச் சார்பற்ற தீர்மானங்களை எடுத்துக்கொள்வோம். இந்த 10, 11 தேதிகளில் அரசாங்க மசோதாக்களை எடுத்துக்கொள்ள இடம் இருக்கிறது. தேவைப்பட்டால் 12-ந் தேதியும் அந்த மசோதாக்களை நீட்டிக்கொள்ளலாம் என்ற முறையிலே, 5-ந் தேதி உத்தியோகச் சார்பற்ற நாளாக இருக்கலாம்.

MR. SPEAKER : If anything is left over in the Bill, it will be taken up on the 9th and if necessary, the House will sit on the 12th instant for transacting official business. This Bill will be taken up as the first item of business on the 4th instant. In that case, we have to adjourn the House now.

SRI M. KALYANASUNDARAM : It looks like that.

MR. SPEAKER : We cannot help it. There is no other business before the House.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நான் ஒழுங்குப் பிரச்னை எழுப்பியது இதற்காக அல்ல, இனி இம்மாதிரி நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான். லீடர் ஆஃப் தி அப்போஸிஷனும், லீடர் ஆஃப் தி ஹவுஸும் ஒப்புக்கொண்டார்கள். அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஒத்திபோடுவதென்றால் ஒத்தி போடட்டும், ஆனால், ஒரு நாளில் கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் வீணாகிறது.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்றைக்குப் பேசியது போக, 4-ந் தேதியும் தொடர்ந்து பேசலாம். அதனால் அதிக நேரம் கிடைக்கும். திருத்தம் கொடுக்கவும் நேரம் இருக்கும். இன்று விவாதித்ததற்கு மேல், 4-ந் தேதி மேலும் இதைத் தொடர்ந்து விவாதித்து முடிவு எடுப்பது என்று வைத்துக் கொள்ளலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இப்பொழுது கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனை சிறந்த யோசனை 11-a.m.
யாகும். அதை ஏற்றுக் கொள்ளலாம், அதை லீடர் ஆஃப் தி அபொஸிஷனும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

MR. SPEAKER : In that case, I suggest that the amendments can be moved now.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, you may give time for giving further amendments also.

MR. SPEAKER : Then, the amendments may be moved when the speeches are made.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை விரிவாகவும் தெளிவாகவும் படித்து, அதற்குப் பிறகு இதன் மீது பேசவேண்டியிருக்கிற காரணத்தால், இந்த விவாதத்தை இத்துடன் நிறுத்தி 4-ந் தேதிக்கு ஒத்திவைத்துவிட்டு, திருத்தத் தீர்மானங்களை 4-ந் தேதி எடுத்துக்கொண்டு அவற்றின் மீது விவாதம் நடத்துவது தான் நல்லது. ஆகவே, 4-ந் தேதிக்கு ஒத்தி வைக்கும்படியாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A.—Statutory Rules and Orders

'Nil'

### B. Reports, Notifications and other Papers.

* 40. *Notification issued with G.O. Ms. No. 2986, Revenue, dated the 18th December 1964, making certain rules under the Defence of India Act, 1962, (Central Act 51 of 1962).*

64914
V211,31 N65
N65-30.6

* Placed on the Table of the House on 31st July 1965.